"ஒப்புயர்வற்ற உலகச்சிரேஷ்டர்"


# மகாத்மா காந்தி

7 JUL 1922
MADRAS

ரெவரண்ட் ஜான் ஹெய்ன்ஸ் ஹோம்ஸ்
நியூ யார்க்கில் செய்த பிரசங்கங்கள்

வி. நாராயணன் அண்டு கம்பெனி
4, கோண்டி செட்டி தெரு, சென்னை
1922

காபிரைட்] [விலை அணா 5



மகாத்மா காந்தி

## ஒப்புயர்வற்ற உலகச்சிரேஷ்டர்

# மகாத்மா காந்தி

---

மகாத்மா காந்தியைப் பற்றியும், அவர் தமது ஜன்ம தேசமாகிய இந்தியாவுக்குச்செய்துவரும் வேலைகளின் அருமை பெருமைகளைப் பற்றியும் இங்கு நான் இன்று காலையில் பேசப் புகுமுன், முன்பு ஒரு நாள்—அதிக காலத்துக்கு முன்பல்ல—அவரை இந்த ஸபைக்கு அறிமுகம் செய்வித்து அவரைப்பற்றிய எனது அபிப்பிராயத்தைத் தெரிவித்த ஸந்தோஷமான ஸந்தர்ப்பம் எனக்கு ஞாபகத்து வருகிறது. அந்த ஸமயம் நான் கொண்ட அபிப்பிராயமானது—இப்போதும் அதே மாதிரி தானிருக்கிறது—என்னவென்றால், இப்போது இந்த ஜகத்தில் இருப்பவர்களில் மகாத்மா காந்தியே எல்லோரிலும் உயர்ந்தவராய் ஒப்புயர்வு அற்றவராக இருப்பவர். அவரைச் சந்தித்த பிறகு, சென்ற சில மாஸமாக உலகம் எவ்வளவு மாறிவிட்டது! அப்போது காந்தியைப்பற்றி இந்தியாவுக்கு வெளியில் அதிகமாக எவருக்கும் ஒன்றுமே தெரியாது. முற்றிலும் அகஸ்

மாத்தாகத் தான் அவர் பெயரை நான் கேட்க நேர்ந்தது. நான் அந்த சமயத்திலேயே அவர் தெய்வீக சக்தி வாய்ந்த ஒரு மேலான அதிமேதாவியென்று உணர்ந்தேனாலும், எனக்கு அவரைப்பற்றிக் கிடைத்த விஷயங்களெல்லாம் மிகச் சொற்பந்தான். மேலும் அவரைப்பற்றி அதிக விஷயங்களை யறிய நான் எடுத்துக்கொண்ட முயற்சி களெல்லாம் வியர்த்தமாகப் போய் விட்டன. ஆனால் இப்போதோ, காந்தியின் பெயர் எல்லாப் பத்திரிகை களிலும் பிரதானமான பக்கத்தில் வெளியாகிவருகிறது. இந்த தேசத்திலும், இங்கிலண்ட், ஐரோப்பா ஆகிய இவ்வி டங்களிலுமுள்ள ஸஞ்சிகைகளிலும் விமர்சனங்களிலும் அவரைப் பற்றி அநேக வியாஸங்கள் வெளியாகிவருகின் றன. ஒரு பெரிய பத்திரிகை—"ந்யூயார்க் ஒர்ல்ட்"— தனது முக்கிய நிருபர் ஒருவரை இந்தியாவுக்கு அனுப்பிற்று. அவர் அங்கு போய் தேச நிலைமையை அறிந்துவந்து, காந்தியைப்பற்றியும் அவரது பலாத்கார மில்லாத ஒத்துழையாமை என்னும் கொள்கையைப்பற்றி யும் தமது பத்திரிகையில் எழுதலானர். சற்றேனும் பிரசித்தியில்லாமல், யாரோ எவரோ என்று சொல்லும்படி யிருந்த காந்தி சில மாஸ காலத்துக்குள் ஜகத்பிரஸித்த மாயும், என்றும் அழியாததாயுமுள்ள கீர்த்திக்கு உயர்ந்துவிட்டார். அவர் தற்போது உலகத்தின் கவனத் துக்கு பாத்திரமா யிருந்துவருகிறார். அவ்வித உயர்ந்த நிலைமையை முன்பு வுட்ரோ வில்ஸன் 1918, 1919-ம் வருஷங்களிலும், நைகோலய் லெனின் என்பவர் 1920-21 வருஷங்களிலும் அடைந்திருந்தார்கள். இப்போது அந் நிலைமையை ஒரு சிறு கீழ்த்தேசவாஸி,—ஒரு உத்தி யோகத்திலும் இருந்திராதவர், கீர்த்தியையும் அதிகாரத்

தையும் காடாதவர், இப்போது ஒரு இங்கிலீஷ் ஜெயிலில் வாடிக் கிடப்பவர்—அடைந்திருக்கிறார்.

ஒரு ஸாமான்ய மனிதனுடைய அதிருஷ்டங்களில் இப்படிப்பட்ட மாறுதல்கள் ஏற்படுவதற்குத் தக்க காரணங்கள் இருக்கவேண்டும். உண்மையில் இந்தக் காரணங்கள் அறிவதற்கு அருமையானவையல்ல. ரொம்ப தூரமாயுள்ள அந்த தேசத்தில் இப்போது என்ன நடந்து வருகிறதென்பதைக் காட்டக்கூடியதான நான்கு ஸம்பவங்களை இப்போது இங்கு குறிப்பிடுகிறேன்.

## தேசீயக் கக்ஷியின் அபிவிருத்தி

முதலாவது, இந்தியாவில் தேசியக் கக்ஷி அதிவேகமாக விருத்தியடைந்து வருகிறது. சில வருஷங்களுக்கு முன்னால் ஸ்வராஜ்யம் அல்லது ஸ்வயாதீனம் வேண்டுமென்றவர்கள் அமிதவாதிகளென்றும் வெறிபிடித்தவர்களென்றும் அழைக்கப்பட்டவர்களே. தொகையில் பெருத்தவர்களான கல்வி நலம் வாய்ந்த தலைவர்கள் எல்லாரும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு உள்பட்டு ஸ்வயஆட்சி அல்லது டொமினியன் *அந்தஸ்து வேண்டுமென்பதைத் தவிர வேறு ஒரு விருப்பமும் கொள்ளவில்லை. பாமரஜனங்களோ வென்றால், அவர்களுக்கு இது ஸம்பந்தமான பிரசினைகள் எதுவும் தெரியாது; அல்லது ஏதோ ஸ்வல்பம் தெரிந்தாலும், அவை விஷயத்தில் உதாஸீனமாக இருந்தார்கள். இப்போதோ, ப்ரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபடுவதற்கான முயற்சி, காட்டுத்தீ போல, இந்தியாவின்

---

* டொமினியன் அந்தஸ்து என்பது கனடா, ஆஸ்டிரேலியா, தென்னாப்பிரிக்கா, ந்யூஸீலண்ட் என்னும் பிரிட்டிஷ் குடியேற்றநாடுகள் அடைந்துள்ள ராஜ்ய அந்தஸ்து.

ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்கு பரவியிருக்கிறது. ஸ்வதேச மன்னர்களும் அவர்களுடைய பரிஜனங்களும், ஆயிரக் கணக்கான ஸிவில் உத்தியோகஸ்தர்களும் அவர்களுடைய வேலைக்காரர்களும், தேச சமூகத்தில் நன்றாய்ப்படித்து ஸம்பத்தி விருப்பவர்களும்—இவர்கள் உள்ள நிலைமைக்கு மாறுபாடு ஏற்படுவதானால், அதை ஆக்ஷேபிப் பவர்கள்—ஆகிய இவர்கள் இந்தியாவில் இங்கிலீஷ் கவர்ன்மெண்ட் இருப்பதை ஆதரிக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால் அவர்கள், மொத்தத்தில் பார்த்தாலும், ஒரு பத்து லக்ஷத்துக்கு மேலிருக்கமாட்டார்கள். மற்றவர்களெல்லாம், அதிக உயர்ந்தவர்கள் முதல் அதிக தாழ்ந்தவர்கள் வரையில், ரவீந்திரநாத் டகூர் முதல் தீண்டாத ஜாதியாரில் அதிக தாழ்ந்தவன் வரையில், எல்லாரும் பிரிட்டிஷ் பந்தத்திலிருந்து விடுதலை யடைவதில் ஒரே நோக்கமாக இருக்கிறார்கள். இந்தியாவின் ஜனத்தொகை முப்பது கோடியாகும். உலகத்தின் ஜனத் தொகையில் ஐந்தில் ஒரு பங்காகும். இதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டால், ஏன் இந்த தேசியக் கிளர்ச்சி திடீரென்று இவ்வளவு தூரம் உலகத்தின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறதென்பதை அறிவது கடினமல்ல. இப்போது இந்தியாவில் நடந்து கொண்டிருப்பது, அதில் ஸம்பந்தப்பட்ட ஜனங்களின் பெருந் தொகையை மாத்திரம் உத்தேசித்தாலுங்கூட தற்போது உலகத்தில் ஒரு முக்கிய சம்பவமாக இருந்து வருகிறது.

## இந்தியாவின் தலைவர்

இரண்டாவது, காந்தி அதி சீக்கிரமாகக் கீர்த்தியடைந்ததற்கு இன்னொரு காரணம் என்ன வென்றால், இங்கிலீஷ் ஆதிக்கியத்துக்கு விரோதமாகக் கிளம்பியிருக்கும் இந்தியர்களுக்கு அவர் தலைவராக யாவராலும் தீர்மானமாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறார் என்னும் விஷயமாகும். சில வருஷங்களுக்கு முன்பு அவர் இங்கிலண்டுக்கும் இந்தியாவில் அது நடத்தி வரும் ஆட்சிக்கும் நண்பராக இருந்து வந்தார். பலதடவைகளில் ஏகாதிபத்திய கவர்ன்மெண்டினிடமிருந்து ஸன்மானங்களை யடைந்திருக்கிறார். ஐரோப்பிய மகா யுத்தத்தில் அவர் நேசக் கக்ஷியாருக்கு ஸாதகமாயிருந்து வந்தார். ப்ரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்காத ஒருவர் எவ்வளவு தூரம் ஆதரிக்க முடியுமோ அவ்வளவு தூரம் இங்கிலீஷ் ஆட்சியின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் ஆதரித்து வந்தார். யுத்தத்துக்குப் பின்பும், அவர் நியாயமான அளவில் ஸ்வய ஆட்சி வேண்டுமென்றதைத் தவிர வேறு விதம் மீறின சீர்திருத்தம் எதையும் வேண்ட வில்லை. ஆனால் ஜெனரல் டையர் தமது மெஷீன் பீரங்கிகளை ஒன்றுமறியாத தீங்கற்ற ஜனங்களின்மேல் பிரயோகித்து, மூன்னூறு முதல் நானூறு வரையில் ஆண், பெண், குழந்தைகளைக் கொன்று, இன்னும் எத்தனையோ பேர்களைக் காயப்படுத்தி அமிருதஸரஸில் படுகொலை நடத்தினதும், காந்தியின் உள்ளம் மாறிவிட்டது. அந்த ஸமயம் முதல் அவர் இங்கிலண்டின் தீர்க்கவைரியாக மாறி, ஸ்வயாதீனத்துக்கு ஆர்வத்துடன் உழைத்து வருகிறார். சென்ற டிஸம்பர் மாதத்துக்கு முந்திய டிஸம்பர்மாதத்தில் எல்லா இந்திய காங்கிர

சானது அவர் பிரேரித்த துராக்கிரககுணமற்றஒத்துழை யாமை ஏற்பாட்டை ஏற்றுத்தீர்மானம் செய்தது. கொஞ் சங்குறைய மூன்று மாஸத்துக்கு முன்பு, சென்ற டிசம்பர் மாதத்தில்அதே காங்கிரஸ் பெரும்பான்மையான ஜன சம் மத்தின்மேல் அவரது ஏற்பாட்டை மறுபடியும் உறுதிப் படுத்தித் தீர்மானம் செய்து, ஸ்வயேச்சை யடைவதற் கான கிளர்ச்சிக்கு காந்தியையே தலைவராகவும் நியமித்தது. ஜனங்களின் கதி இப்போது முற்றி லும் அவர் வசத்தில் தானிருக்கின்றது. காந்தி வாய் திறந்து ஒன்று பேசினுரென்ருல் இந்தியாவேவாய்திறந்து பேசியதாகும். காந்தி ஒன்று செய்தால் இந்தியாவே செய்ததாகும். காந்தி கைது செய்யப்பட்டால்,இந்தியாவே பங்கப்பட்டு அவமான மடைந்ததாகும். உலகில் தோன்றி யுள்ள மற்ற எவரையும்விட இந்தப் பெரியோரே ஜனங் களுடைய ஆத்மாவின் அவதாரமாக உண்மையில் விளங்குகிருர் என்பது எனது நம்பிக்கை.

## அடக்குமுறைக் கொள்கை

மூன்ருவது, தற்போது காந்திக்கு கியாதியும் செல்வாக்கும் ஏற்பட்டிருப்பதற்கு இன்னெரு காரணம் இங்கிலீஷ் துரைத்தனத்தார் கைக்கொண்டுள்ள அடக்கு முறைக்கொள்கையாகும். தற்போது இந்தியாவிலுள்ளது போன்ற நெருக்கடியான ஸந்தர்ப்பத்தில் ஒரு கவர்ன் மெண்ட் அடக்குமுறைக் கொள்கையைக் கைக்கொள் வானேன் என்ருல், கவர்ன்மெண்டுகளுக்கு தேச சரித்திர நீதிகளாவது மானிட சுபாவமாவது தெரியாதென்றும், முன்னனுபவங்களைக் கொண்டு தமது கொள்கைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளத் தெரியாதென்றுந் தான்

சொல்லவேண்டும். ஏனெனில் அடக்குமுறைதன் ஒரு போதும் பயன் தந்ததில்லை. பூர்வீக தேச சரித்திரங்களி லாகட்டும், தற்கால தேச சரித்திரங்களிலாகட்டும் அடக்கு முறையால், அது எதற்காக உபயோகிக்கப்பட் டதோ அந்த நோக்கத்தை சாதிக்கமுடிந்ததாக ஒருவிருஷ் டாந்தமேனும் எவரும் எடுத்துக் காட்ட முடியாதென்று நான் உறுதியாகக் கூறுவேன். இம்முறை இங்கிலீஷா ரிடம் ஒருபோதும் பயன் பெற்றதில்லை. 1775-ம் ஆண் டில் இது அமெரிக்காவில் வீணாயிற்று. சென்ற நூற் றூண்டில் இரண்டாம் பத்திலும் நாலாம் பத்திலும் இங்கி லீஷ் தேசிய வியவகாரங்களில் அடக்குமுறை பயன் கொடாமல் போயிற்று. தென்னாப்பிரிக்காவில் போயர் யுத் தத்துக்குப்பின் அது வீணாயிற்று. நேற்று அது ஐயர் லண்டில் வீணாய்ப் போயிற்று. நாளை இந்தியாவி லும் அது பயன் கொடாமல் வீணாகப்போகும். அடக்கு முறையால் எதாவது பயனுண்டோ என்றால், அது எதிரி யின் வழக்கைப் பலரு மறியச் செய்வதே. "நம்மை நேசிக்கும் நண்பர்களால் நாம் விளம்பரம் செய்யப் பெறு கிறோம்." என்றார் ஷேக்ஸ்பியர் மஹா கவி. "பயங்கர மான எதிரிகளாலுங்கூட நாம் விளம்பரம் செய்யப் பெறு கிறோ"மென்று நான் சேர்த்துச் சொல்வேன். இந்தியர் கள் ஸ்வயாதீன மடையச் செய்துவரும் பிரயத்தனங் களைப் பலரறியச் செய்யவாவது, அவைகளுக்குப்பிறர் அனுதாபங் காட்டவாவது, அவர்களே செய்யக்கூடிய எதுவும், சென்ற சில மாதங்களாக பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தினர் கைக்கொண்டுள்ள கொள்கை யைப்போல் பலன் தந்திராது. உதாரணமாக, அலி ஸகோதரர்கள் கைது செய்யப்பட்டபோது, அவ்விஷயம்

முகம்மதிய உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் பாவி, ஒவ்வொரு முகம்மதியனேயும் இந்தியர்கள் அயாதீன மடைவதை யாதரிக்கும்படி செய்துவிட்டது. லாலா லஜ பதிராய் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்ட போது, ஆயிரக்கணக்கான இங்கிலீஷ்காரரும் அமெரிக் கர்களும் விழித்துப்பார்க்கலானார்கள். ஏனெனில் அவர் களுக்கு லஜபதிராய் ஒரு கல்விமான் என்றும் குணசீல ரான கனவான் என்றும் தெரியும். ஆகவே அவரைச் சிறை யில் அடைக்கும்படி அப்படிப்பட்ட நிலைமை என்ன நேர்ந் திருக்கக் கூடுமென்று எண்ணலானார்கள். அதுமாதிரி தான் காந்தியைச் சிறையிலடைத்த விஷயத்திலும்! உலக மெங்கும் லக்ஷக் கணக்கான ஜனங்களுக்கு காந்தியை இன்று தெரியும். நாளைக்கு அவர்கள் காந்திசெய்தது சரி யென்று நம்புவதோடு, அவர்மேல் அன்பு கொள்ளத் தலைப்படுவார்கள். ஏனெனில் அவர்கள் அவரை ஏகாதி பத்தியக் கொள்கைக்குக் காவுகொடுத்த ஒரு ஸாதுவாக எண்ணுகிறார்கள்.

## இளவரசர் விஜயம்

கடைசியாக இந்தியாவில் சென்ற சில மாதங்களாக என்ன நடந்து வருகிற தென்பதைக் காட்டக்கூடியதான இளவரசர் விஜயத்தை உங்களுக்கு ஞாபகப்படுத்துகி றேன். சுத்த மூடத்தனத்துக்கு இந்த சம்பவத்துக்கு ஒப்பாக எதையும் சொல்வதற்கு முடியாது. இந்தி யர்கள் பிரிட்டிஷ் அரசரிடம் கொண்டுள்ள ராஜ பக் தியை வெளியிட்டுக் காட்டுவதற்காக இந்த இளவர சர் விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டதென்று சொல்லப்

பட்டது. உண்மையில் இந்தியர்கள் இராஜவிசுவாச முள்ளவர்களாக இருந்திருந்தால் ராஜவிஜயத்துக்கு அவசியமே நேர்ந்திராது. அந்த ஸமயம் இருந்த நெருக்கடியான நிலைமையில் ராஜவிஜயத்தால் என்ன பலன் கோரப்பட்டதோ அதற்கு மாறான பலன்தான் கிடைக்கக்கூடியதாயிருந்தது. இளவரசர் பிரயாணஏற்பாடு வெளியானதும், காந்தி தமது பகிஷ்கார ஏற்பாட்டைச்செய்யலானார்—ஒன்றுமறியாத சிறு வாலிபராகிய இளவரசரிடம் அவருக்குத்துவேஷம் என்பதல்ல--பின்னை ஏனென்றால், இந்தியர்கள் இங்கிலீஷ் ஆட்சியை எவ்விதம் கருதுகிறார்கள் என்பதைக்காட்ட இளவரசர் விஜயமே தக்க சமயமென்று அவர் எண்ணினார். இளவரசர் இந்தியாவுக்கு வந்ததும் பஹிஷ்கார ஏற்பாடு அமுலுக்கு வந்தது.

இளவரசர் போன இடமெல்லாம் இந்தியர்கள் தவிர்த்த பார்வையாய் புறங்காட்டி நின்றார்கள். கடைசியில் அல்லகபாத்தில் இந்தியர்கள் முற்றிலும் அவரை பஹிஷ்காரம் செய்தார்கள். வேல்ஸ் இளவரசர் அந்நகரத்தையடைந்த போது இறந்தோருடைய நகரத்துக்குப் போனது போலிருந்தது. தெருக்களில் எவருமே யில்லை. கதவுகள் தாளிட்டிருந்தன. ஜன்னல்கள் மூடப்பட்டிருந்தன. அந்தச் சமயத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் நகரத்துக்கு வெளியில் ஓரிடத்தில் ஸ்வராஜ்ய நோக்கத்தை வெளியிட்டு, அதை ஆதரிக்கப் பிரதிக்ஞை செய்யக்கூடினார்கள். இப்போது முடிந்துவரும் வேல்ஸ் இளவரசரின் விஜய மானது இந்தியரின் அமைதி யின்மையைக் காட்டும் ஒரு காட்சியாயிற்று. மேலும் அது உலகமெங்கும் காந்தியையும் ஸ்வயாதீனத்துக்கு அவர் செய்துவரும் போராட்டத்தையும் பிரசித்தப் படுத்திவிட்டது.

## காந்தியின் குணவிசேஷம்

இவ்விதம் உலகத்திலுள்ள மானிட வகுப்பாரெல்லோரும் இந்தியாவினிடம் கவனம் செலுத்தும்படி சென்ற சிலமாதங்களாக நடந்துவந்த சம்பவங்களில் சிலவற்றை இங்கு குறிப்பிட்டேன். காந்தி யார்? அவர் என்ன செய்து கொண்டிருக்கின்றார் என்பதை மனிதர்கள் அறியும்படி செய்தமட்டில் அந்தச் சம்பவங்கள் நன்மை பயக்கின்றவையே. ஏனெனில் அகத்தூய்மை உண்டு பண்ண இந்தக் கீர்த்திசைத் துறவியை அறிவதைவிட உயர்ந்ததொன்றுமில்லை. ஆத்தும பவித்திர மென்பதின் உண்மையான பொருளை, அகத்தூய்மைக்கும் புறத்தில் பக்தியுடைமைக்கும் சாதகமான அமிசத்தை, நன்கறிந் தோருக்கு அவரது நாமதேயம், விண்ணினின்றும் மெதுவாக வந்து படியும் பனித்துளி போல், அவரது ஹிருதயத்தில் படிகின்றது.

ஆயினும் இன்னொரு முக்கியமான வகையில் பார்த்தால், இச்சம்பவங்களை தெளர்பாக்கிய மாகவே கருத வேண்டும், ஏனெனில், அவைகளால் காந்தியை ஸாதாரண தேசீயக் கிளர்ச்சித் தலைவராக பலர் அறியும்படியாகிறது. அடிமைப்பட்ட ஜனங்களின் சுவாதீனத்துக் காகப் போராடுபவராக, வில்லியம் டெல், வில்லியம் வால்லேஸ், ராபர்ட் எம்மட், காஸ்ஸியஸ்கோ, ஜார்ஜ் வாஷிங்டன் முதலிய சரித்திரப் பிரமுகர்களோடு ஒருவராகக் கருதும்படி இந்த மேற்சொன்ன சம்பவங்கள் செய்து வருகின்றன. ஆனால் அப்படிப் பட்ட தன்மையும் அவருக்கு உண்டென்பது உண்மையே. அவரது தேசத்தில் அவர், ஸ்வயாதீனத்துக்குப் பாடுபட்டுப் பயனடைந்த

முற்காலத்துப்பெரும் தேசியத் தலைவர்களுக்குச் சமான மாக ஒரு பெரிய தலைவராக இருந்துவருகிறார். ஆனால் அவ ரை இந்த குணத்தைக்கொண்டுமட்டும் கருதுவது பெருந் தவறு. இவர் அந்த லக்ஷியத்துக்கும் மேம்பட்டவர். அவ ரது கைங்கரியம் ஒரு பெரும் தேசத்தை ராஜீய விஷயங் களில் கடைத்தேறச் செய்யும் வேலையை விடச்சிறந்தது. இந்தியாவை இங்கிலீஷ் ஆட்சியிலிருந்து விடுவிக்க வேண் டிய வேலை அவருக்கு மிக முக்கியமானதென்றாலும், தற்போது அப்பெரிய வேலையில் அவர் அதிக சிரத்தை கொண்டிருந்தாலும், அதை அவரது உயர்ந்த நோக்கங் களுள்ள வாழ்க்கையில் வந்து போய்விடும் ஒரு அற்ப சம் பவமாகவே எண்ணவேண்டும். சுயாதீனத்துக்கான முயற்சி ஏற்படாமலேயிருந்தாலுங்கூட, காந்தி இன்றி ருப்பது போலவே அப்போதும் அவர் யாவரினும் மேம் பட்ட புருஷனாகவே விளங்குவார். இப்போதைய அவ ரது முயற்சி கைகூடினும் கைகூடா விடினுங்கூட அவர் தமது கைங்கரியத்தை அதன் முடிவு ஏற்படும் வரை யில் செய்து கொண்டுதானிருப்பார். அவரை வால்லேஸ், வாஷிங்டன், காரிபால்டி என்னும் பெரியோர்களுடன் சேர்த்துப்பேசுவது தவறு. அவர்கள் யாவரும்போர்க்களத் தில் கத்தியுருவி ரத்தம் சிந்திய போர்வீரர்கள். காந்தியோ, ஸ்வயாதீன மடைவதற்குக்கூட ஆயுதமெடுக்க மறுக்கும் எதிர்க்காமை என்ற விரதம்பூண்டவர். துராக்கிரத்தினும் மேலான ஆத்ம சக்தி வேண்டுமென்று சொல்பவர். எதிர்க் காமை விரதம் பூண்ட எல்லாரையும் போலவே அவர் ஒரு மதத் தலைவராக இருந்துவருகிறார். அவர் தாமிருக்கும் இடத்துக்காவது தேசத்துக்காவது பட்டு பெண்றிரா மல் உலகமனைத்தையும் கவரக்கூடிய மதத்தலைவராக இருக்

கிறார். காந்தி இருப்பதும், நடப்பதும், வாழ்வதும், எல்லாம் ஆத்ம சிந்தனையுடன் தான். அவாது வியவகாரங்கள் அரசர்களுடன் அன்று; அமைச்சர் களுடனு மன்று. கடவுளிடமும், ஆத்துமா விடமுந் தான். அவர் தமது ஜனங்களையாவது இதர ஜனங்களையாவது ராஜீய சுதந்திரம் அடையச் செய்யும் ஸாமான்ய நோக்கம் மாத்திரம் கொண்டவரல்லர். அதற்கும் மேலாக அவர் மானிட ஜாதியார் ஆத்ம சக்தி அடைவதையே மேலான நோக்கமாகக் கொண்டிருக்கிறார். மானிட சரித்திரத்தில் மிக்க உயர்வாயுள்ள எந்த சிரேஷ்டருடனாவது அவரை ஒப்பிடவேண்டு மென்றால், மதஸ்தாபகர்களாய் உயர்ந்த தீர்க்கதரிசிகளாயிருந்த கான்பூஷீயஸ், லேயோட் ஸே, புத்தர், ஸோராஸ்டர், முகம்மது, இன்னும் சரியாகச் சொல்ல வேண்டுமானால், நாஸாத்தில் அவதரித்த ஜீஸஸ், இவர்களுடன்தான் ஒப்பிடவேண்டும். அதிககாலம் சென்றபின் ஒருவ ரொருவராக ஆசியாவிலிருந்து இந்த ஈசுவர ஸாக்ஷிகள் தோன்றினர். ஒவ்வொருவராக அவர்கள் ஜனங்களுக்கு நீதிபோதத்தாலும் அதன்படி நடந்து காட்டுவதாலும், வாழ்க்கை நியமத்தையும், அதனால் மானிட ஜாதியார் உய்யும் வழியையும் கற்பிக்கத் தோன்றி யிருக்கிறார்கள். இந்த திவ்விய மரபில் இப்போது, நமது காலத்தில், இந்தியாவில் இந்த மகாத்மா தோன்றியிருக்கிறார். இந்த மகாத்மா காந்தியானவர் யேசு கிறிஸ்துவுக்குச் சமானமானவர் என்று நான் சொல்லுவது எனது ஈசுவர பக்திக்கும் சரித்திர உண்மைக்கும் விரோதமகாது என்று எண்ணுகிறேன். இருவருடைய ஜீவிய சரித்திரங்களையும் ஒப்பிடும்படி எழுதினால், ப்ளுடார்ச்சு என்னும் சரித்திர ஆசிரியர் கிரேக்க ரோம

வீரர்களின் சரித்திரங்களை எழுதினதுபோல் எழுதிப் பார்த்தால்—எவ்வளவு மட்டில் இருவருடைய சரித்திரங்களும் ஒற்றுமையுள்ளனவென்பது விளங்கும். காந்தியினிடம் ஒரே அனுபவந்தான் குறைவாக இருக்கும். அதாவது சிலுவையில் அறைபட்ட விஷயங் குறைவு. ஆனால் இப்போது இந்தியாவில் நடந்து வரும் விஷயங்களைக் கொண்டுபார்க்கில், அவ்வனுபவமும் சீக்கிரம் அவருக்கு ஏற்படலாம்.

அவர் இவ்விதம் தெய்வீகத் தலைவராக இருப்பதைப்பற்றித்தான் இப்போது பேசப்போகிறேன். இந்தியர்களின்மேல் காந்திக்கு இவ்வளவு செல்வாக்கு ஏற்பட்டதற்குக் காரணமென்ன? அவருக்கு இவ்வளவு செல்வாக்கு உண்டென்பதை மறுப்பதற்கில்லை. ஒரு மனிதன் இவ்விதம் செல்வாக்கு அடைந்திருப்பது உலகத்தில் ஒருபெரும் அற்புத ஸம்பவமாக இருந்து வருகிறது.

காந்தி ஒரு இடத்திலிருந்து வேறிடம் போகும்போது பலஸ்தீனத்தில் யேசுவை ஜனக்கூட்டம் பின் தொடர்ந்தது போல ஆண் பாலாரும் பெண் பாலாரும் கூட்டமாக அவரைப் பின் தொடர்ந்து செல்லுகிறார்கள். அவர் ஒரு நகரத்திலாயினும் பட்டணத்திலாயினும் பிரசங்கம் செய்ய வந்தால், இருபத்தையாயிரம் முதல் எழுபத்தையாயிரம் வரை ஆண்களும் பெண்களும் பிரசங்கத்தைக் கேட்க வந்து கூடுகின்றனர். அவருக்கு அற்புத சக்திகள் உண்டென்று அறியாதவரும் மூட நம்பிக்கையுள்ளவரும் நம்புகிறார்கள். நாட்டுப்புறங்களில் ஜனங்கள் அவர் செய்ததாகச் சொல்லப்படும் கதைகளைக் கூறிவருகிறார்கள். எங்கும் அவரை "மகாத்மா" என்று அழைக்கிறார்கள்.

ஏனென்றால் ஜனங்கள் அவர் தெய்வீகத்தன்மை பொருந்தியவர் என்று அவரைக் கொண்டாடுகிறார்கள். காந்திக்கு ஜனங்கள்மேலுள்ள செல்வாக்குக்குச் சமமாக ஒன்று சொல்ல, புராதன காலங்களில் மூலே மூடுக்கான இடங்களில் தான் தேடவேண்டும். அப்போதும் ஒப்புவமை முற்றிலும் பொருந்தமாயிராது. சரித்திரத்தில் வந்துள்ள மற்ற யாவரையும்விட அவரது தலைமையைப் பின்பற்றி நடப்பவர்களின் தொகை மிக்க அதிகமென்றும், தலைவரிடம் விசுவாசத்திலும் அவர் சொற்படி கேட்டு நடப்பதிலும் மேம்பட்டவர்கள் என்றும், விருப்பு வெறுப்பற்று சரிவரச் சீர்தூக்கி அபிப்பிராயங்கொள்ளும் ஒரு பெரியோர் தெரிவித்திருக்கிறார்.

## செல்வாக்கு

அவருக்கு இவ்விதம் செல்வாக்கு எப்படி ஏற்பட்டதென்றால், சாமானிய மானிட வியக்தியால் அது ஏற்பட்டதென்று சொல்லமுடியாது. அச்செல்வாக்கு அவரது ஆகிருதியிலில்லை. ஏனெனில் அவர் தோற்றம் மிக்க அற்பமானது. அவர் நூறு இராத்தலுக்கும் குறைவான நிறையை உடையவர். முப்பது வர்ஷ காலமாக மிகக் கடுமையாகக் காயக்கிலேசம் செய்து தேகம் ஒடுங்கி பலமற்றவராயிருக்கிறார். சில சமயங்களில் நின்று பிரசங்கம் செய்யவும் முடியாமல், ஒரு நாற்காலியில் உட்கார்ந்த வண்ணமாகப் பிரசங்கம் செய்கிறார். அவரது காம்பீரியமான சரீர லக்ஷணம் அவரது கண்களே. தசையைத் தகித்து விடுமோ என்னும்படி அவ்வளவு ஆர்வத்துடன் ஜ்வலிக்கும் ஆத்தும சக்தியுடன் அவைகள் விளங்குகின்றன.

தேக ஆகிருதியைப் போலவே அதிக புத்தி விசாலத்தாலும் அவரது செல்வாக்கு ஏற்படவில்லையென்று தெரிகிறது. புத்தியில் பிரகஸ்பதியாயிருந்த லியோ டால்ஸ்டாயினுடன் ஒப்பிடுவது ஒருபோதும் முடியாது. அந்த இந்தியர் "யுத்தமும் ஸமாதானமும்," "அன்னு காரெனினு," "எனது மதம்" போன்ற புஸ்தகங்களை எழுதக்கூடுமென்று என்மட்டில் சொல்லுமிடத்து நான் எண்ணவில்லை. காந்தி பெரியோர் என்றாலும் இவ்வித பாண்டித்திய வேலையில் அவர் முயற்சி செய்வவதாகத் தோன்றவில்லை. அவர் பிரஸங்கம் செய்யும் விஷயத்திலும் இவ்விதமே குறைபாடுள்ளவரென்று நான் எண்ணுகிறேன். ஆனால் இவ்விஷயத்தில் நான் அவ்வளவு உறுதியாகச் சொல்லவில்லை. ஏனெனில் ஸங்கீதத்தில் போல பிரசங்க விஷயத்திலும் உயர்வு தாழ்வைப் பற்றிய விதி வியவஸ்தைகள் மேல்காட்டுக்கும் கீழ்காட்டுக்கும் வித்தியாசப்படுகின்றன. இந்தியாவில் சிறந்த வாக்சாதுரியமென்று கருதப்படுவது இவ்விடத்தில், ஐக்கிய நாடுகளில், சிறந்ததாகக் கொள்ளப்படமாட்டாது. ஆனால் காந்தியின் பிரசங்கங்களில் அச்சிட்டு வெளியானவைகளை நான் படித்ததைக்கொண்டு பார்க்குமளவில், அவர் சிறந்த பிரசங்கியென்று எனக்குத் தோன்றவில்லை. எட்மண்ட் பர்க், பாட்ரிக் ஹென்றி முதலியவர்களைப் போல் அவரது பிரசங்கத்தில் கேட்போரையும் வாசிப்போரையும் மயக்கும்படியானது எதுவும் கிடையாது. உதாரணமாக இந்த ஸமயத்தில் வேத வாக்கியமாக வாசித்துக்காட்டத் தகுந்ததாய் உயர்ந்த கருத்தும் அழகும் பொருந்தி நடையில் உயர்ந்திருக்கும் மேற்கோள் ஒன்று காந்தியின் பிரசங்கங்களிலிருந்து எடுக்க தேடிப் பார்த்தும் கிடைப்பது கஷ்டமா

யிருந்தது. காந்தி பெரிய சபைகளைக்கூட பிரமித்து மயங்கும்படி செய்ய வல்லமை யுள்ளவரென்பது பல அத்தாக்ஷிகளால் தெரிய வருகிறது. ஆனால் அவ்வித வல்லமை அவரது வாக்கு வல்லமை யாலல்ல. பின் ஏதோ வேறு காரணத்தால் தான்.

## அவரது முகவெட்டு.

இந்த மனிதரை இந்தியர்கள் பார்த்து 'மகாத்மா' வென்று ஆரவாரம் செய்யும் போது, அவர்கள் காந்தியினிடம் என்ன காண்கிறார்கள்? ஒரு பெரிய டாம்பீகமான சரீரத் தோற்றமல்ல, பிரஹஸ்பதியினது போன்ற மேதையுமல்ல, அல்லது வரம்பெற்ற பிரசங்கியுமல்ல, பின் என்னவெனில் எவற்றினும் உயர்ந்த தெய்வத் தன்மை பொருந்திய முகவெட்டு அல்லது லக்ஷணமே. அவர்கள் பார்ப்பது, பாமர ஜனங்கள் பலருடன் தமது வாழ்க்கையை ஒற்றுமைப்படுத்தி அவர்களுடன் அனுதாபங் காட்டும் குணமுள்ள புருஷனே. காந்தி நல்ல சொத்துள்ள ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்தவர். தமது ஜன்ம தேசத்திலும் இங்கிலண்டிலும் தக்க கல்வி வசதிகளை யடையப் பெற்றவர். இங்கிலண்டிலிருந்து அவர் பம்பாய்க்குத் திரும்பி வந்ததும் அவர் வக்கீலாக உத்தியோக மாரம்பித்தார். பிற்கு சில காலத்துக் கெல்லாம், எக்காலத்தும் வெகு சிலரே செய்யக் கூடியதான காரியத்தைச் செய்யலானார்.

பொருளும் கீர்த்தியும் அடைந்து சாமான்ய ஜனங்களினின்று விலகி யிருக்கும் நிலைமையை அடைவதற்கான வழியைத்தேடி உயராமல், வேண்டுமென்றே கீழே செல்ல, தௌர்ப்பாக்யத்துக்கும் துன்பத்துக்கும் அடிப்

படைக்குப் போக, மனிதர்கள் நிர்க்கதியாகிக் கஷ்டப்பட்டு உழைத்து சாகும் நிலைமையடைய, வேர்வை விட்டு, கண்ணீர் விட்டு, ரத்தம் கக்கிக் கஷ்டப்படும் நிலைமையில் தானுமொருவரா யிருக்கத், துணிந்தார். ஆரம்பம் முதற் கொண்டே அவர் தாம் அனுபவித்துச் சகிக்காததாக எந்த கஷ்டமும் இருக்கக் கூடாதென்றும், தாம் உணராததாக எந்த அவமானமும் இருக்கக் கூடாதென்றும், தாம் தாங்காததாக எந்தச் சிலுவையும் இருக்கக்கூடா தென்றும் தீர்மானித்து விட்டார்.

தீண்டாத ஜாதியார்கூட தமது ஸகவாஸத்துக்குக் கீழ்ப்பட்டவராக இருக்கக் கூடாது. அவர்கள் நிலைமைக்குத் தாம் படிந்து மிகக் கடுமையான உலக நிந்தனையை அவர்களுடன் சேர்ந்து அனுபவிக்க வேண்டும். மிகக் கோரமான மனித அனுபவங்களை யெல்லாம் தமதாகப் பாவித்து வந்தார். அவர் வெகு காலமாக சீர்திருத்தத்துக்குப் பாடுபட்டு வருகையில், தாம் பிறரை யடையக் கூப்பிடும் கஷ்டங்களை யெல்லாம் தாமே முதலில் அடைந்து காட்டிவந்தார். உதாரணமாக, தென்னாப்பிரிக்காவில் ஹிந்துக் கூலியாட்களை கவர்ன்மெண்டின் அக்கிரமங்களுக்கு விரோதமாகக் கிளப்பி நடத்தின கதை எவ்வளவு நேர்த்தியானது! அவ்விடத்தில் காந்தி தான் வெட்ட வெளியில் வெறுந்தரையில் முதல் முதலாகப் படுத்தவர். தம்மை யனுசரித்தவர்களை ஏழைமை விரதம் மேற்கொள்ளச் சொல்லுமுன் அவரே முதலில் ஏழைமை விரதம் பூண்டார். தமது ஜீவனத்துக்காகப் பயிர் செய்ய முதலில் ஆரம்பித்தவரும் அவரே. ஸமீபத்தியதாகிய அரைத்துணி மாத்திரம் உடுத்தும் விரதம் எவ்வளவு உருக்கமானது! காந்தியின் விரோதிகளில் எவரிடமாவது பேசும்

கள். அவர் உடனே இந்த அரைத்துணி மாத்திரம் கட்டுவதாகிய விரதத்தைக் குறிப்பிட்டு, இது எவ்வளவு புத்தியற்ற வைத்தியக்காரத்தனமென்று சொல்லுவார். இந்த விருத்தாந்தம் யாது? சில மாதங்களுக்கு முன்னால், காந்தி கவர்ன்மெண்டினிடம் ஒத்துழையாமைக் கொள்கையை அமுலுக்குக் கொண்டுவருகையில், இங்கிலண்டியிருந்து வரும் துணிகளை யெல்லாம் பஹிஷ்காரம் செய்ய வேண்டுமென்றும், கையிலுள்ள சீமைத்துணியை யெல்லாம் கொளுத்திவிட வேண்டுமென்றும், தங்களுக்கு வேண்டிய துணிக்கு தங்கள் வீட்டிலேயே ராட்டினத்தில் நூற்றுக் கொள்ளவேண்டுமென்றும் தமது சிஷ்யவர்க்கத்துக்குக்கட்டளையிட்டார். இந்த அவருடைய கட்டளையின் படி யாவரும் நடக்கத் தலைப்பட்டால், யாவருக்கும், அதிலும் முக்கியமாக, ஏழைகளுக்கு அசௌகரியமும் கஷ்டமும் ஏற்படுமென்றும், பலர் துணியேயில்லாமல் தவிக்க நேரிடுமென்றும் தெரியவந்தது. உடனே காந்தி தன்னிலும் அதிகமான கஷ்டத்தை எவரும் அடைந்து தவிக்கக்கூடாதென்று கருணை கொண்டு, வெறும் அரைத்துணி மாத்திரம்அணிந்து வெளியில் ரஸ்தாக்களிலும் பட்டணங்களிலும் வந்துலாவலானார். இவ்விதச் செயல்கள் காந்தியினிடம் ஸர்வ சாதாரணம். அவரது ஜீவியம் முழுமையிலும், மற்ற மனிதர்போலவே தாமும் கஷ்ட சுகங்களை அனுபவிக்கவேண்டுமென்றும், தாம் வித்தியாசமாக இருக்கக் கூடாதென்றும் பேரார்வம் மிகுந்திருக்கிறது. ஜனங்கள் அவரைப் பார்க்கையில், அவரை ஒரு தலைவராக மட்டும் கருதுவதில்லை. ஒரு தோழனாகவும் சகோதரனாகவும் எதிலும் தம்மைப்போலவே யிருப்பவராகவும் ஆனால் தெய்வீக சக்தி வாய்ந்தவராகவும் கருதுகிறார்கள்

## தன்மறுப்பு

காந்தியின் பிரகிருதியை அறிவதில் இவ்விதம் தமது தேசவாஸிகளுடன் உறவாடுவதேயன்றி வேறொரு முக்கிய குணமும் கவனிக்கத்தக்கது. அது அவருடைய தன் மறுப்பாகும். அவர் தம்மைத் தியாகம்செய்து கஷ்டங்களை யெல்லாம் சகிக்கத்தக்க சக்தியை அடைந்திருக்கிறார். அவரது ஜீவியத்தின் ஆரம்பத்திலேயே அவர் தெரிந்து வேண்டுமென்று கஷ்டப்படுதல் என்னும் விய வஸ்தையை—அதாவது பிறரை அவஸ்தைப்படச்செய்யாமல் தாமே அவஸ்தைகளை யனுபவிக்க ஒப்புகிறவனுக்கே உலக ஸாம்ராஜ்யம் கிடைக்கும் என்ற உண்மையைக்—கண்டறிந்து, தமது வாழ்க்கை முழுவதையும் அந்த நோக்கத்தை யடைவதற்கு ஏற்ற விதமாகக் கிரமப்படுத்தி வந்திருக்கிறார். முதல் முதலில் அவர் தமது சொத்தைத் தியாகம் செய்தார், பிறகு தமது அந்தஸ்தையும், தமது தொழிலையும், பிறகு தமது ஜனங்களிடம் விசுவாசம் வைக்க ஒட்டாமல் தடுக்கும் எல்லாவற்றையும் தியாகம் செய்யலானார். தமது பழக்க வழக்கங்களிலோ மத்தியகாலத்து ஐரோப்பிய துறவி கண்டு பொறாமைப் படும்படியான ஸன்யாஸத்தைக் கைக்கொள்ள ஆரம்பித்து இன்னும் அந்த முறையை அனுசரித்து நடந்து வருகிறார். சீர்திருத்த வேலையிலோ அவர் எந்த தண்டனையையும் சாக்குப்போக்கு வைத்துத் தவிர்க்காமல் சந்தோஷத்துடன் தமக்கு விதிக்கப்பட்ட எல்லாத் தண்டனைகளையும் தமக்குக் கிடைத்த ஆயுதங்களாக எண்ணி ஏற்றுக்கொண்டிருக்கிறார். தம்மை ரகசியமாகக் கொல்ல எண்ணிய கொலைபாதகனைக்கூடப் பயமின்றி சந்தித்திருக்கிறார். தென்னாப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் அவர் நான்கு தடவை

சிறைவாச மடைந்திருக்கிறார். மூன்று தடவை அவர் ஜனக் கும்பலால் அடிக்கப்பட்டிருக்கிறார். ஒரு தடவை சாக்கடையில் இறந்தவராக எண்ணி விடப்பட்டிருக்கிறார். அவர் தேகத்தில் சவுக்கடியின் தழும்புகளும், அவர் மணிக்கட்டிலும் கணுக்கால்களிலும் அவரை சிறைக் கூடத்துச் சிறு அறைகளில் இரும்புக் கம்பிகளில் சேர்த்துக் கட்டிய சங்கிலிகளின் குறிகளும் இருக்கின்றன. மனிதனுக்கு நேரிடக்கூடிய அதி கடுமையான கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்திருக்கிறேன்" என்று காந்தியே சொல்லியிருக்கிறார்.

இதெல்லாம் ஏன்! அவர் வேண்டுமென்றே, தியாகத்தைத் தமது வாழ்க்கை தர்மமாகவும், தமது யுத்தத்தில் ஆயுதமாகவும் கைக்கொண்டதால் தான்! இதைத்தான் இந்தியர்கள், தமது தலைவரின் தழும்பேறி உலர்ந்து ஒட்டியிருக்கும் தேகத்தைப் பார்க்கும்போது, காண்கிறார்கள். இதைத்தான் அவர்கள் காந்தியை நாட்டுப்புறத்தில் தூரதேசத்தில் இருப்பதாக நினைக்கும் போது, நினைக்கிறார்கள். மறுபடி கைதுசெய்து சிறையிலடைப்பதால், இப்படிப்பட்ட மனிதரை நிலைகுலையச் செய்து, அவரது சிஷ்யவர்க்கத்தார் அவரை உபாஸிக்காமலிருக்கும்படி செய்து விடலாமென்று கருதும் கவர்ன்மெண்டின் மடமையை என்னென்று சொல்வது!

## அன்பின் அவதாரம்

நாம் இதுவரையில் குறிப்பிட்ட காந்தியின் குணாதிசயங்களெல்லாவற்றையும் விட உயர்ந்தது அவர் வாழ்வு முழுவதும் சலந்துற்றுக்காணும் அன்பேயாகும். இந்தியாவின் இந்த மகாத்மாவைப் போல் மானிட ஜாதியாரி

டம் அவ்வளவு அன்பும் ஆதரவும் உள்ளவர் நமது காலத்தில் எவருமே கிடையாது. எக்காலத்திலுமே சிலர் தானிருக்கக்கூடும். கோபம், பகை, ஆக்கிரம், வெறுப்பு, இவையெல்லாம் காந்தியினிட மிருந்து விலகி விட்டன. தமது ஸகஜனங்களிடம் கொண்டிருக்கும் பரிசுத்தமான அன்பைத்தவிர துர்க்குணம் எதுவும் அவரிடம் கிடையாது. ஸகஜனங்கள் என்றால் யார்? தம்மைப்போல் இவ்வுலகில் வாழும் எல்லா மனிதர்களுமே. கடவுளைப் போலவே, காந்திக்கும் ஜனங்களிடம் சிறியோர் பெரியோர் என்ற வித்தியாசம் கிடையாது. அவர் தமது அன்பாகிய ஆலிங்கனத்தில் வெள்ளை மனிதர்களையும் கறுப்பு மனிதர்களையும் சமமாகவே ஏற்றுக்கொள்ளுகிறார். முகம்மதியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் வெகு காலம் இருந்துவந்த சச்சரவை ஒழித்து இருவகுப்பாரையும் ஸகோதரர்களாக இருக்கும்படி செய்திருக்கிறார். ஜாதி ஏற்பாட்டின் சில சமூக சௌகரியங்களை அவர் ஒப்புக் கொண்டாலும், தமது சொந்த வியவகாரங்களில் ஜாதி வித்தியாசங்களை ஒழித்து விட்டார். பிராமணர்களையும் தீண்டாத ஜாதியாரையும் சமபந்தி போஜனத்தில் உட்காரவைத்துக் சாப்பிடச் சொலுகிறார். இங்கிலிஷ்காரர்கள் கூட அவரது நல்லெண்ணத்திலிருந்து விலக்கப்படவில்லை. ஏனெனில் 'உன்னெதிரிகளை நேசி' யென்பது யேசு கிறிஸ்துவுக்குப்போலவே காந்திக்கும் ஒருபோதும் மாற்றமுடியாத நீதியாகும். "பிரிட்டிஷ் ஜனங்களை நான் நேசிப்பதாயும், அவர்களுடன் நான் கலந்துறவாட விரும்புவதாயும் அவர்களிடம் சொல்லுங்கள்," என்று அவர் ஆயிரக்கணக்கான தடவை சொல்லியிருக்கிறார். தென்னாப்பிரிக்காவில் சிலர், அவர்

உயிருக்கு உலை வைக்க முயன்ற போது அவர் என்ன செய்தார் என்பதை எண்ணிப்பாருங்கள். ஆஸ்பத்திரியில் சாகுந்தருவாயிலிருக்கையில், தம்மைக் கொலை செய்ய முயன்றவன்மேல் வழக்கெடுத்துக் கொள்ளுப்படி சிலர் சொன்னபோது, அவர் மறுத்துவிட்டார், "அவனை நான் ஏன் கெடுக்கவாவது தண்டிக்கவாவது முயலவேண்டும். அவன் தன் மனதுக்குச் சரியென்று தோன்றியதை முன்னிட்டுத் தன் உயிரையும் திரணமாக நினைத்தான். அந்த மனிதனிடம் எனக்கு நம்பிக்கையுண்டு. அவனை யான் நேசித்து அவனை என் பக்கம் சேர்த்து விடுகிறேன்" என்றார். சொன்னபடியே செய்துவிட்டார். சில மாதத்துக்கெல்லாம் அந்தக் கொலை பாதகன் காந்தியின் மன்னிக்கும் குணத்தால் குணம் மாறி, அவரது சிஷ்யர்களில் அதிபக்தி யுள்ளவர்களுள் ஒருவனாக ஆகிவிட்டான்.

அம்ருதஸரஸ் படுகொலைக்குக் காரண பூதராயிருந்த ஜெனரல் டையரிடத்தில் காந்தி நடந்து கொண்ட விதமும் வியக்கத்தக்கது. அதுவிஷயமாக அவர் சொல்லுவதாவது: "நான் டையருடன் எதிலும் ஒத்து வேலைசெய்ய மாட்டேன். அவருடைய அதிகாரத்தை ஒப்புக்கொள்ள மாட்டேன், அவருடைய உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியவும் மாட்டேன். ஆனால் அவர் காய்ச்சலாகப் படுத்து விட்டால், உடனே நான் அவர் படுத்திருக்கு மிடம் ஓடி, வைத்ய சிகித்ஸையும் உபசாரமும் செய்து சௌக்கியமடையும்படி செய்வேன்!" காந்தியினிடம் கஷ்டம் ஏற்பட்டதற்காக விசனமும், அதற்காகப் பகையும், பழிக்குபழி வாங்கு மெண்ணமும் ஒருசிறிதும் கிடையாது. அவர் அன்பே உருவாய் அவதரித்திருப்பவர். அவர்

சொல்லுவதாவது: "கோபத்தால் எந்தக்காரியமும் சாதிப்பது முடியாது. அதர்மத்தை தர்மத்தால் எதிர்க்க வேண்டும். அசத்தியத்தை சத்தியத்தால் எதிர்க்க வேண்டும். சூதையும் தந்திரத்தையும் ஒளிவு மறைவின்மையாலும் கபடமின்மையாலும் எதிர்க்க வேண்டும். திகிலும் பயமும் உண்டாக்கும் செயல்களை தைரியத்தாலெதிர்க்கவேண்டும்." பொறுமையுடன் தெரிந்து கஷ்டப் பட்டு ஆத்மா பரிசுத்தமடைந்த பிறகு, சென்ற சிலவருஷங்களாக அவர் செய்து வந்த எந்தக் காரியங்களும் மேற்சொன்ன அவரது சித்தாந்தத்துக்கு சாக்ஷிகளாக விளங்கிவருகின்றன.

## அவரது வேலையின் தன்மை

மேற்சொன்ன, காந்தியின் இந்த குணங்களெல்லாம் இந்தியர்களுக்கு நன்றாய்த் தெரியும். இவைகளால் தான் காந்தியினிடம் ஜனங்களுக்கு அவ்வளவு விசுவாசமும் பக்தியும் ஏற்பட்டிருக்கின்றன. இந்த குணங்களால் தான் காந்தியும் அவர் வியவகாரங்களும் உலக முழுமையும் போற்றப்பட்டும் கவனிக்கப்பட்டும் வருகின்றன. காந்தி வைதீக வாழ்க்கையின் மர்மங்களை யெல்லாம் நன்கறிந்து அவைகளின்படி நடந்து வருகிறார். நிகரற்ற வாழ்க்கைக் கிரமத்தின்படி நடந்து வந்து அதன் பலனாக, அவர் ஈசுவர விபூதியின் நிலைக்கு ஒப்பானவர் ஆகியிருக்கிறார். பணிவினாலும் தியாகத்தாலும் மானிட வகுப்பாரிடம் குறைவுறாத அன்பினாலும் அவர் ஆயிரம் வருஷத்துக்கொரு முறையோ, அல்லது இரண்டாயிரம் வருஷத்துக் கொருமுறை தானோ அவரிதரிக்கும் பரிபூர்ண மூர்த்திகளில் ஒருவராக அவர் ஆகியிருக்கிறார்.

இன்றே அவர் சிறையில் கிடக்கிறார். அவரைப் போன்றவர்கள்தான் நமது உலகவியவகாரங்களின் நன்மை தீமைகளை பகுத்தறிந்து தீர்மானமாகச் சொல்லக்கூடியவர்கள். ஒரு யேசுவையும் ஒருகாந்தியையும் சுயேச்சையாக இருக்க விட மனமில்லாத ஒரு ஜன சமூகம் நாம் வாழத்தக்கதல்ல. இந்தக் காரணத்தினாலேயே அச்சமூகம் அழிந்து போகவேண்டுமென்று விதிவசமாக ஏற்பட்டிருக்கிறது.

## ஒரு புது சகாப்தம்.

காந்தியின் கொள்கைகள் ஸர்வஜகதாவசியகமானவை யென்பதற்கு இன்னொரு அடையாளம் அவரது எதிர்க்காமை என்னும் கொள்கையே. எதிர்க்காமை யென்பதனாலேயே கேடு செய்வோனின் விருப்பப்படி நாம் சாந்தமாகப்பணிந்து நடக்க வேண்டுமென்று தாத்பரியம் அல்ல. பின் என்னவென்றால், கொடுங் கோலானுடைய எண்ணத்துக்கு விரோதமாக நமது முழு ஆத்தும சக்தியையும் பிரயோகிப்பதே. காந்தி தான் எதிர்க்காமை என்னும் கொள்கையை பெரிய அளவில் உபயோகித்துப் பலன் கண்டவர். சமூக வாழ்க்கையின் பிரசினைகளில் பலவற்றைத்தீர்க்க வேண்டி அந்தக் கொள்கையை பலன் தருமாறு பிரயோகிக்க ஏற்பாடுகள் செய்தவரும் அவரே. ராஜீய சீர் திருத்தத்திலும் சமூக சீர்திருத்தத்திலும் தக்க முறையாக எதிர்க்காமை பயன் படுமென்று காந்தி நன்கு காட்டியிருக்கிறார். ஆகையால், நியுடன், டார்வின் இவர்கள்போல மனித சரித்திரத்தில் ஒரு புது சகாப்தத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

184349

## எதிர்க்காமை என்னும் கொள்கை

இதுவரை எதிர்க்காமை என்னும் கொள்கை இரண்டு வித அசௌகரியங்களுக்கு உள்பட்டிருந்தது. முதலாவது, ஏதோ முற்காலத்தில் சிலர், அங்கொருவர் இங்கொருவராகவோ, அல்லது தனிப்பட்ட சிறுஜனத் தொகுதியாரோ தான் இந்தக் கொள்கையை ஆசாரணையில் கொண்டிருந்தார்கள். இக்கொள்கையைக் கைக்கொண்டிருந்த பெரியோர்கள் ஜீஸஸ் (யேசுகிறிஸ்து), ஸெண்ட் பிரான்ஸிஸ், வில்லியம் லாய்ட் காரிஸன், ஹென்ரி டேவிட் தோரே, லியொ டால்ஸ்டாய் இவர்களே. இவர்கள் யாவரும் பரிசுத்தமான குணங்களும் செல்வாக்கு முள்ளவர்கள். எதிர்க்காமை என்னும் கொள்கையால் வற்படக் கூடிய பலன்களை தங்களுடைய வாழ்க்கை முறையில் நடந்து காட்டி யிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கொள்கையை ஒரு பெரிய ஜனசமூகம் முழுவதிலும் நடக்கும்படி செய்ய முயலவில்லை அல்லது முயல சாத்தியப்படவில்லை. எதிர்க்காமை என்னும் கொள்கையை அனுசரித்த ஜனத் தொகுதிகளும், முழு சமுகங்களும் அங்கங்கே சில சமயங்களில் தோன்றினதுமுண்டு. உதாரணமாக முதலிரண்டு நூற்றுண்டுகளில் கிறிஸ்தவர்கள் இவ்விதம் எதிர்க்காமை விரதம் பூண்ட சமுகமாக இருந்து வந்தனர். மத்திய காலங்களில் காதாரி, வால்டென்ஸெஸ், ஆல்பிஜென்ஸெஸ் போன்ற சில பதித ஜாதிகளும், ஸமீப காலத்தில் க்வாக்கர்கள், மென்னனைட்டுகள், ரஷ்யாவிலும் மேற்குக் கனடாவிலும் உள்ள டௌகோபார்களும் இவ்வித விரதம் பூண்டு நடந்தவர்கள். இந்தத் தொகுதிகள், ஒவ்வொன்றும், டால்ஸ்டாய் லக்ஷண முள்ளவர்கள் மாதிரி,

184349

மற்றவர்களோடு சேராமல் தனித்தும், தன்னில் பூர்த்தியாயும் இருந்து வந்தன. அவைகள் தங்கள் சித்தாந்தத்தின்படி தாங்கள் நடப்பதையே பிரதானமாகக்கொண்டிருந்தார்களே யன்றி பிறரைப்பற்றி அதிகம் கவனிக்கவில்லை. அதனால் அவைகளுடைய சரித்திரங்கள் உதாரணமாகப் பயன்படுகின்றனவே யொழிய, அவைகள் பிறரை அவ்விதம் நடக்கும்படி தூண்டுவனவல்ல. அவைகளால் எதிர்க்காமை விரதமானது சிறிய அளவில் என்ன சாதிக்கக் கூடுமென்பது தெரிகிறது. ஆனால் ஒரு பொது ஜனசமூகக் கொள்கையாக அது பயன்படுமா என்பது அவைகளால் தெரிய வரவில்லை.

முற்காலம் எதிர்க்காமைக் கொள்கையடைந்திருந்த இன்னொரு அசௌகரியம் என்னவென்றால், அக்கொள்கையைக் கொண்டோர் பரசுகம் நாடினவர்களாக எண்ணப்பட்டார்கள். மத்திய காலத்தில் எதிர்க்காமை விரதம் பூண்டோர் ஸெண்ட் பிரான்ஸிஸ் போன்ற துறவிகளாவர். அவர்கள் உலக வாழ்க்கையை விட்டொழிந்து, தாம் மாத்திரமோ தம்து சிஷ்யர்களுடனோ தனியாகப் போய் வசித்து வந்தார்கள். இக்காலத்தில் இவ்விரதம் கொண்டோரில் உயர்ந்தவர் டால்ஸ்டாய். அவர் தமது குடும்பம், தேசம், தமது பிறப்பு, மதம் இவைகளை விட்டொழித்து, தனியாக ஒரு துறவிபோல் வஸித்து வந்தார். கடைசியில் புதரில் காயம்பட்டு ஓடும் பிராணிபோல் தேசம்விட்டு ஓடிப்போய் தனியாக இறந்துபோனார். இவர்கள் எல்லாருமே வாழ்க்கை முறையில் உயர்ந்த ஆசாணையுள்ளவர்கள். எக்காலத்தும் எதிர்க்காமை விரதம் பூண்டவர்கள். அகத்தூய்மையும் புறத்தியாகமும் பூர்ணமாகக்கொண்டவர்களாயிருந்தார்கள். ஆனால் லோகோப

காரம் ஏற்படும் விஷயத்திலோ, அவர்களால் மற்றவர்களுக்கு ஏதும் நன்மை ஏற்பட்டதில்லை. உலக வாழ்க்கையின் கஷ்டமான பிரசினைகளைத் தீர்க்க, அவைகளிலிருந்து நீங்குவதுதான் வழியென்று கண்டு அதன்படி நடந்துவந்தார்கள். உலக சரித்திரத்தில் டால்ஸ்டாய் உயர்ந்த குணமுள்ள சிறந்தோரில் ஒருவராக விளங்குகிறார். என்றாலும், தற்காலம் ஜனஸமூகத்தைக் கலக்கி வரும் பிரசினைகளில் எதையும் தீர்க்க அவர் ஒருசிறிதும் முயலவில்லை.

## அன்பை ஆதாரமாகக் கொண்ட ஜனஸமூக மாறுபாடு.

மேற்சொன்ன இந்த இரண்டு அசௌகரியங்களால் தான், தற்காலத்து தொழில் சச்சரவை யாகட்டும், யுத்தங்களை யாகட்டும் வராதபடி தடுக்க எதிர்க்காமை விரதம் தக்க முறையாகும் என்று சொல்லுவதற்கு ஸாத்தியப்படுகிறதில்லை. சிலர் சொல்லுவது என்னவென்றால், எதிர்க்காமை விரதம் அதை யாசரிப்பவருடைய மனோ ஸ்ரேஷ்டத்துக்கு ஏற்றதாகவும் சமூகப் பொறுப்புகளிலிருந்து விடுபடுவதற்கு ஏற்ற முறையாகவும் இருக்கலாம்; ஆனால் உலகத்தில் நடப்பவைகளை உள்ளது உள்ளபடி பார்த்து, அவைகளுக்கு அநுகுணமாக நடக்கவேண்டியிருப்பவனுக்கு இம்முறை சற்றும் பயன் படாது என்பதே. ஆனால் இப்போதோ, காந்தி, ஒரு புது மாதிரியான எதிர்க்காமை விரதம் பூண்டவர். நமது சரித்திரத்தில் இதுகாறும் இம்மாதிரி ஏற்பட்டிராத ஒரு பெரிய சமூகப் புரட்சியை, 'தீங்கை எதிர்க்காதே' என்னும்கொள்கையை ஆதாரமாக் கொண்டு நடத்திவருகிறார். சமூக மாறுபாட்டுக்கு ஒரு வழியாகவும் உண்மையில் தேசிய

ஸ்வயாதீனம் அடைவதற்கான யுத்தமென்று சொல்லக் கூடியதாயிருக்கும் போராட்டத்தில் ஒரு தக்க ஏற்பாடாகவும் இந்த எதிர்க்காமைக் கொள்கையை காந்தி கைக்கொண்டிருப்பதில் அவர் உலக அனுபவம் அதிகரிக்கச் செய்திருக்கும் வேலை அபாரமானது. அவரது முதற் கொள்கை துராக்கிரக மின்மையாகும். அதைக் கைக்கொண்டவர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் துராக்கிரமமாக தமது பலத்தை உபயோகிக்கக் கூடாது. அவரது இரண்டாவது கொள்கை—மற்றெல்லாவற்றிற்கும் அஸ்திவாரமாயுள்ள கொள்கை—ஒத்துழையாமையாகும். இதை மேலெழுந்தவாறு கவனித்தால் நாஸ்திபக்ஷமாகத் தோற்றும்:—அதாவது எந்த வகையிலும் இங்கிலீஷ் கவர்ன்மெண்டாருடன் ஒத்துழைக்கக்கூடாது. அவர்களிடமிருந்து எந்த சன்மானத்தையும் வெகுமதியையும் பெறக்கூடாது. அவர்களுடைய நீதி ஸ்தலங்களை உபயோகிக்கக் கூடாது. அவர்களுடைய (ஆதரவுபெற்ற, அல்லது அவர்களால் நடைபெறும்) பள்ளிக்கூடங்களுக்குப் பிள்ளைகளை அனுப்பக்கூடாது. இங்கிலீஷ் ஸாமான்களை வாங்கக்கூடாது. வரிகள் கொடுக்கக்கூடாது. அவர்களுடைய சட்டங்களை ஒப்புக்கொள்ளக்கூடாது. ஆனால் இந்தக்கொள்கையை ஆழ்ந்து கவனித்தால், இந்தியர்கள் எதற்கும் பிறருடைய சகாயத்தை எதிர்பாராமல் தாமே தமக்கு வேண்டியனவற்றை செய்துகொள்ளும் திறமையுள்ளவர்களாக வேண்டுமென்னும் கருத்துக்கொண்டதாகத் தெரியவரும். ராஜீய விஷயத்திலும் பொருளாதார விஷயத்திலும் தன்னைத்தானே ஆதரித்துக்கொள்ளக்கூடியதாய் ஜன சமூகத்தைத் தக்கபடி மாற்றி ஏற்படுத்தி, அதனால் அது ஸ்வயேச்சையாயிருக்கும்படி செய்வதே இந்தக் கொள்கை

யின் நோக்கமாகும். காந்தி செய்துவருவது என்னவென்றால், ஜனங்கள் தங்கள் வேலைகளைத் தாங்களே செய்து கொள்ளவேண்டும்; தங்களுடைய வியவகாரங்களைத்தாங்களே நடத்தவேண்டும்; தங்களுடைய ஸ்தாபனங்களைத் தாங்களே ஏற்படுத்தி நடத்தவேண்டும்.

இவ்விதம் நடந்து வருவதால், அன்னிய ராஜாங்கத்தாரால் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களை யெல்லாம் பொறுமையுடன், பகையாவது, பழிக்குப் பழி வாங்க வேண்டு மென்ற எண்ணமாவது இல்லாமல்—எதிரியினிடம் நல்லெண்ணத்துடன்—சகித்துக் கொள்ளவேண்டும். காந்தியானவர் இப்போது, அன்பை அடிப்படையாகக் கொண்டு—அதாவது, ஒருவருக் கொருவர் பரஸ்பரம் ஊழியம் செய்வதால் பரஸ்பர அன்பும், விரோதியினிடம் மன்னிப்பும் அனுதாபமும் காட்டுவதால் அன்பும்—ஆதாரமாகக் கொண்டு ஜனசமூக மாறுபாட்டைச் செய்ய பெரிய ஏற்பாடுகள் செய்து வருகிறார். துராக்கிரகத்தின்முன் எந்த தேசத்தாரும் நிர்க்கதியாகப் பரிதபிக்க வேண்டியதில்லை யென்றும், அப்படி துராக்கிரகத்துக்கு எதிர் துராக்கிரகமாக நடந்தால் கஷ்டங்களும் வினாசமுமே ஏற்படுமென்றும் காட்டிவருகிறார். ஜனங்கள் செய்ய வேண்டியதெல்லாம் என்னவென்றால், கிரமமான பழக்கத்தால், துராக்கிரத்தின் மாயைக்குள் அகப்படாமல், உயரவேண்டும்; வேண்டுமென்று அதை சகித்து, அதை ஜயிக்கவேண்டும்.

## அன்பு என்னும் கொள்கை

ஜனசமூகப் பிரசினைகளைத் தீர்க்கப் பெரிய அளவில் இந்த எதிர்க்காமை என்னும் கொள்கையை பிரயோ

கிப்பதிலிருந்துதான், காந்தியினுடைய கைங்கரியம் ஒரு தேசம் அல்லது ஒரு ஜாதியின் வரம்புக்கு உள்படாமல் அவைகளுக்குப் புறம்பட்ட இடங்களிலும் கூடப் பிரயோஜனப்படக் கூடியதாக இருக்கிறதென்று சொல்ல வேண்டியிருக்கிறது. தமது இந்த முயற்சியில் மகாத்மா காரியசித்தி பெறுவாரானல், உலக சரித்திரத்தில் முதல் தடவையாக எதிர்க்காமை என்னும் கொள்கை ஸர்வஜன ஸம்மதமான கொள்கையாக ஏற்படலாகும். அப்போது இந்தக்கொள்கை, யாரோ ஒருவருடைய, அல்லது ஒரு வகுப்பாருடைய விபரீத நியமமாக இருக்கிறதென்று பலர் அபவாதம் சொல்லுவது நின்று போகும். அது ஏதோ பாலோக புத்தியும் அதற்கேற்ற பழக்கவழக்கங்களும் உள்ளவர்களுக்குத்தான் ஏற்குமென்ற வாதமும் போய்விடும். காந்தி காரியசித்தி பெறுவாரானல் சமுக முயற்சியில் எதிர்க்காமை ஒருநல்லமுறையென்றும் துராக்கிரகமுறைஇனி ஒருபோதும் எந்த வியவகாரத்துக்கும் வேண்டியதில்லை யென்றும் ஏற்பட்டுவிடும். தம்மைஎதிர்க்கவந்தவர்களிடமிருந்து காத்துக்கொள்ளவும், ஸ்வயாதீனமடைவதற்கான முயற்சியிலும் பலாத்காரத்தைவிட உயர்ந்த முறையுண்டென்றும் ஏற்படும். காந்தி சித்தி பெற்ருல் என்று சொன்னேன்? காந்தி ஏற்கனவே காரிய சித்தியடைந்து விட்டார். நேற்று அவர் கைது செய்யப்பட்டதே அவருடைய வெற்றியின் கடைசி அடையாளமாகும். உண்மையான அன்பு மேலீட்டால், எல்லாவற்றையும் தாங்கி, எல்லாவற்றையும் நம்பி, எல்லாம் நன்ருகவே முடியுமென்று எண்ணி, எல்லாவற்றையும் சகிக்கும் இந்த ஒரு சிறு மனிதருடைய பொறுமையே இங்கிலண்டுக்கு மற்ற எக்கத்தியினும் கொடுமையாக, கூர்மை

யுள்ள தாக இருக்கிறது. மனிதர்கள் விவேகிகளாகஇருப்பார்களானல், காந்தியால் பலாத்காரத்தின் அதிகார காலம் முடிவடைந்து விடும். ஸமாதானமும் ஸஹோதரத் துவமும் ஆரம்பமாகும்.

## நாகரிகத்தின் விரோதியல்ல

இந்தப் பிரசங்கத்தை முடிக்கு முன் காந்தியைப் பற்றிய இன்னொரு விஷயத்தையும் சொல்லுகிறேன். சென்ற முன்னூறு வர்ஷங்களாக நாகரிகத்தால் ஏற்பட்டுள்ள எல்லாவற்றையும் அழிக்க எண்ணும் வீராவேசங் கொண்ட பைத்தியக்காரர் என்று அவருடைய விரோதிகள் பலர் குற்றம் சொல்லுவதுண்டு. உதாரணமாக அவர் இந்தியாவில் வைத்திய சாலைகளை மூடிவிடவேண்டுமென்றும், ரெயில்வேக்களைப் பெயர்த்துவிட வேண்டுமென்றும், அச்சியந்திர சாலைகளையும் பஞ்சாலைகளையும் அழித்துவிட வேண்டுமென்றும், தற்கால வாழ்க்கை முறைக்கு ஏற்றதாக உள்ள பற்பல சாதனங்களையும் அழிக்கவேண்டுமென்றும், அப்படிச் செய்து ஒரேயடியாக மூற்காலத்து ஸுலபமான ஸாமான்ய வாழ்க்கை முறையை ஏற்படுத்திவிட வேண்டுமென்றும், அவர் விரும்புவதாகச் சொல்லுகிறார்கள். ஆனல் காந்தி, தற்போது நமக்குள் ஸர்வ ஸாதாரணமாக வழங்கிவரும் பல சாதனங்களை அவர் எல்லாரையும் போலவே எப்போதும் உபயோகித்து வருவதைக் கொண்டே அவர் தற்போது காணப்படும் சமூக ஏற்பாட்டை அழிக்க எண்ணும் பைத்தியக்காரர் என்று சொல்லுவது தவறு என்று ஏற்படும். உதாரணமாக அவர் ஒரு கொலைபாதகனல் தென்னுப்பிரிக்காவில் ரணகாயம் செய்யப்பட்டபோது அவர்

ஒரு ஆஸ்பத்திரிக்குப் போய், அவருடைய குணமறிந்த இங்கிலீஷ் நர்ஸால் ஸ்வஸ்தம் செய்யப்பட்டார். இந்தியாவில் அவர் அடிக்கடி ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் போக ரெயில்வேயை உபயோகிக்கிறார். முன்பு ஒரு சமயம் ரொம்ப துரிதமாக ஒரு இடத்துக்குப் போக வேண்டியிருந்தபோது, அதிகவேகமாகப் போகக் கூடிய ஒரு மோட்டார் வண்டியில் பிரயாணம்செய்தார். அவர் அடிக்கடி அச்சியந்திரத்தை உபயோகிக்கிறார். அதனால் நல்ல காரியசித்தியும் ஏற்படுகிறது.

## மேல்நாட்டு நாகரிகத்துக்கு விரோதம்

ஆனால் காந்தி இந்தியாவுக்கு வந்துள்ள மேல் நாட்டு நாகரிகத்தை ஒழிக்கப் பாடுபடுகிறார் என்பது உண்மையே. அதை ஒழித்து ஸ்வதேசிய, அதாவது புராதனமான, நாகரிகத்தை ஸ்தாபிக்க முயலுகிறார் என்பதும் உண்மையே. இதுதான் அவர் தெய்வீக சக்தி வாய்ந்த அதிமேதாவியான தலைவரென்பதைக் காட்டுகிறதென்பது எனது அபிப்பிராயம். ஏனெனில் காந்தி தமது தேசத்தை கவனிக்கும்போது, அது இரண்டுவகையில் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறதென்று எண்ணியிருக்கிறார். ஒன்று ப்ரிட்டிஷ் ஆட்சிக்குக் கீழ்ப்பட்டிருப்பது. அதாவது அன்யமான ஒரு ராஜாங்க முறையுடன் பிணைக்கப்பட்டிருப்பது. இதைப்போக்கவே தேசீய முயற்சி நடந்துவருகிறது. மற்றது மூலதனம் படைத்தவர்களுக்குக் கீழ்ப்பட்டு அவர்களிஷ்டப்படியாடும்படி யிருப்பது—மூலதனம் படைத்தவர்களோ தற்காலத்து நூதன யந்திர சாதனங்களைக் கொண்டு, பலபேரை ஓட்டையாண்டிகளாக்கி சில பேரிடம் பணத்தை சேர்த்து வைக்கப்பாடுபடுகிறார்கள். காந்திக்கு

இந்தியாவானது இங்கிலீஷ் ஏகாதிபத்தியத்துக்கு அனுகூலமான ராஜீய ஏற்பாட்டிலிருந்து விடுபடவேண்டியது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் மேல்நாட்டு மூலதனம் படைத்தவர்களின் பொருளாதார ஏற்பாட்டிலிருந்து விடுபடுவதும். இங்கிலீஷ் ஆட்சிமாத்திரம் போய், இங்கிலீஷ் ரெயில்வேக்கள், இங்கிலீஷ் தொழில் சாலைகள், இங்கிலீஷ் கம்பெனிகள் முதலியவைகள் இப்போதுபோலவே இருந்துவருமானல், இந்தியர்கள் ஸ்வயாதீனத்தை யடையாமல், அதன் சாயையே அடைந்தவர்களாவார்கள். அவர்கள் இன்னும் அடிமைப்பட்டே— மனித ஸமூகத்தின் வாழ்வுக்குக் கேடான ஒரு ஏற்பாட்டுக்கு அடிமைப் பட்டே யிருப்பார்கள். இந்த நமது மேல் நாட்டு நாகரீகத்தின் அந்தக்கரணத்தில் ஜன ஸமூகத்துக்கு நாசமே யொழிய வாழ்வின் அம்சம் எதுவுமில்லை யென்பது காந்தியின் நம்பிக்கை. நாம் ஒரு பெரிய யந்திரத்தை உண்டுபண்ணி விட்டோம். அது பிரான்கென்ஸ்டீனைப்போல் நம்மை பக்ஷித்து வருகிறது. இந்தப் பிசாசு, வேலை யென்னும் சக்கரத்தில் நம்மைப் பிணைத்து, தன ஆசையால் மயக்கி, ஐஹிகமதத்தை மிகத்தாழ்ந்த வகையிலும் உபயோகிக்கும்படி நம்மைக் கீழ்ப்படுத்தி, நமது ஸன்மார்க்க நியமங்களையும் ஆஸ்திக நியமங்களையும் கெடுத்து விட்டது. உலக வியவகாரங்களில் இந்த நாகரிக ஏற்பாடு பயன்படாமல் போயிற்று. அதனல், இப்போது நடந்த மஹாயுத்தம் போன்ற ஆபத்துகள் தான் நேருகின்றன. மேல் நாட்டை ஜயித்து நாசம் செய்து, ஆசியாவுக்கு வந்து கொண்டிருக்கும்—பொருளாதார நாசத்துக்கு ஹேதுவான—இந்த ஏற்பாட்டைத்தான் காந்தி கண்டு

வெறுக்கிறார். இந்த ஏற்பாடு ஜப்பானில் வெற்றி பெற்று வேரூன்றி விட்டது. சீனாவில் புகுந்திருக்கிறது. இந்தியாவின் ஹிருதயஸ்தானத்தில் இது நாட்டப்பட்டிருக்கிறதென்பதை அவர் கண்டு கொண்டு அதை ஒழிக்க யுத்த பேரிகை அடிக்கிறார். அவர் அபின் வியாபாரத்தை ஒழிக்க போராடுகிறார். மது பான வியாபாரத்தைத் தொலைக்க முயலுகிறார். தொழில்சாலைத் தறிக்குப்பதிலாக வீட்டு ராட்டினத்தை ஏற்படுத்திவருகிறார். பொதுவாக ரெயில் ரோட்டையும், மோட்டார் வண்டியையும் யந்திரங்களையும் வெறுத்துத் தள்ளுகிறார். தாமத மாவதற்கு முன்னால் இந்தியாவை மேல் நாட்டு நாகரிக ஏற்பாட்டின் கேட்டிலிருந்து காத்து, அதன் புராதனமான தேசிய நகரிகத்திற்கு அதை உயர்த்த முயன்றுவருகிறார். நவீன வியாபார முறைகளும் யந்திர ஸாதனத்தின் கேடான முறைகளும் தொழில் சாலைகளில் கூலியாட்களின் அடிமைத்தனமும் மூலதனங்கொண்டு வியாபாரம் செய்யும் முதலாளிகளுடைய அக்கிரமங்களும் இந்தியாவுக்கு வந்து இந்தியாவுக்குக் கேடு செய்யாதபடி காக்க முயன்றுவருகிறார். இந்தியாவின் ஆத்மம் கெடாமலிருக்கவேண்டி இவ்விதம் அவர் செய்துவருகிறார். இந்தியர்களின் ஸ்வபாவ லக்ஷணம் கெடாமலிருக்க வேண்டி—அவர்களுடைய ஆர்ப்பாட மின்மை, அவர்களுடைய கலை, அவர்களுடைய மதம், ஒருவருக்கொருவரிடமும் கடவுளிடமும் கூடமான ஸ்நேகத்வம், ஆகிய இவைகள் கெடாமலிருக்கவேண்டிப்பாடுபட்டு வருகிறார்.

## ஆத்ம உத்தாரணம்

இதனால்தான், இந்தப்பெரிய கைங்கரியத்தால்தான், காந்தி நான் ஏற்கனவே முதலில் சொன்னபடி உண்மையில்

ஒரு பெரிய மதத்தலைவராக ஆகியிருக்கிறார். இவ்விதம் ஆத்ம உத்தாரண வேலையில் அவர் உழைத்து வருவதால் தான் அவர் மேல் திசைக்கா கட்டும் கீழ்த்திசைக்கா கட்டும் லோக முழுவதும் கவனிக்கக் கூடியவராக விளங்கு கிறார். ஏனெனில் அவர் இந்தியாவை ரக்ஷிப்பதால் உலகமு ழுவதையுமே ரக்ஷிப்பவராகிறார். நவீன தொழில் முறை களின் கேடுகள் தமது நாட்டுக்கு வாமல் காப்பதால், இதர நாடுகளிலும் அந்த முறைகளின் கேடுகள் நாளா வட்டத்தில் குறைந்து ஒழியும்படி செய்து வருகிறார். ஸீஸர் மகா சக்ரவர்த்தி காலத்தில் ரோமிருந்த நிலைமை யில்தான் தற்போது நமது மேல்நாட்டு நாகரீகமும் இருந்து வருகிறது. இந்த நாகரீகம் தனது துராக்ரமான சக் தியால் உலகம் முழுவதையும் தன்வசப் படுத்திக் கொண்டு தனது நன்மைக்காக பொருளாதாரங் களையும் ஜனங்களையும் பாழாக்கி வருகிறது. அதன் வெளிப்பெ ருமை விருத்தியாக ஆக, அதன் உள் கேடு அதிகரித்து வருகிறது. ரோம்சரித்திரத்தில், நல்ல ஸந்தர்ப்பத்தில், அழிந்துவரும் உலகத்துக்கு உயிர்கொடுக்க, அவ்வுல கம் இரண்டாயிரம் வர்ஷகாலம் பிழைத்திருக்கக் கூடியதாகச் செய்ய, ஏசுகிறிஸ்துவும் கிறிஸ்தவர்களும் தோன்றினார்கள். இப்போது அந்நிலைமைக்கு அதிகமாறு பாடில்லாத இந்த ஸமயத்தில் காந்தி தோன்றியிருக்கிறார். அவரும் இந்த உலகத்துக்குப் புதுஉயிர் கொடுக்க வந்தி ருக்கிறார். அதனால் அவரை லோகரக்ஷகர் என்று சொல் வது உண்மையில் பொருந்துமல்லவா?

## யேசுகிறிஸ்துவே மறு-ஜனனம்

காந்தியை யேசுகிறிஸ்துவோடு அடிக்கடி ஒப்பிட நேருகிறது. நாஸரத்தில் தோன்றிய அவர் தெய்வீக

சக்தியுள்ளவர். அவரும் அன்பு என்னும் தர்மத்தை போதித்து எதிர்க்காமை என்னும் கொள்கையை ஸ்தாபித்து, அது ஸித்தி பெறுவதற்கான மார்க்கத்தை ஏற்படுத்தினார். கடவுளை ஸ்தாபித்துப் பணப் பேயைத் தள்ளி பூமியில் ஸ்வர்க்காதிக்யத்தை நிலைநாட்ட முயன்றார். காந்தியும் இப்படியே. இந்த இந்தியரும் தமது வாழ்க்கை முறையில் துறவியாக இருந்து வருகிறார். இவரும் அன்பென்னும் தர்மத்தை போதித்து அதைக் கைக்கொண்டு நடந்துவருவதற்காக எதிர்க்காமை என்னும் விரதத்தை ஏற்படுத்தி யிருக்கிறார். ஆத்ம ராஜ்ஜியமென்னும் ஒரு புது ஸமூக ஏற்பாட்டை ஸ்தாபிக்க முயன்று வருகிறார். நான் யேசுகிறிஸ்து மறுபடி வரப்போகிறார் என்பதை நம்புவதில்லை. நம்பினால் யேசுவே மறுபடி காந்தியாக அவதாரமாகி யிருக்கிறார் என்று துணிந்து சொல்லுவேன். சரித்திர ரீதியாக "மறுஸம்பவம்" சரியல்லவென்றாலும், அலங்கார ரீதியாக அது சரி யென்றே கொள்ளலாம். அப்படி யென்றால் ஏன் காந்தியை யேசுகிறிஸ்து என்று சொல்லக் கூடாது.

# காந்தியின் ஜீவ்ய சரித்திரம்

## ரெவரண்ட் ஹோம்ஸ் செய்த
## முதல் பிரஸங்கத்திலிருந்து எடுத்தது

---

காந்தி சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன்னால் சம்பத்தும் விவேகமும் நாகரிகமும் உள்ள ஒரு குடும்பத்தில் ஜனனமானார். அப்படிப்பட்ட குடும்பத்துப் பிள்ளைகள் வளர்க்கப்படுவது போலவே காந்தியும் வளர்க்கப்பட்டார். பணத்தாலும் அன்பு வாய்ந்த பெற்றோர்களாலும் பெறக்கூடிய எல்லா சௌகரியங்களையும் அடைந்திருந்தார். 1889-ம் வர்ஷத்தில் சட்டப்பரீக்ஷைக்கு வாசிக்க இங்கிலண்டுக்குப் போனார். கிரமமாக வாசித்துத் தேறி பாரிஸ்டர் பட்டம் பெற்றுப் பிறகு இந்தியாவுக்குத் திரும்பி வந்து பம்பாயில் வக்கீலாக அமர்ந்து நல்ல வரும்படியடையலானார். ஆனால் இதற்கு முன்னாலேயே அவர் அதிக மதப் பற்று உள்ளவராக இருந்துவந்தார். இங்கிலண்டுக்குப் போவதற்கு முன்னாலேயே மது,மாமிசம், பெண்பால் ஆகிய இம்மூன்றையும் விலக்கிவிடுவதாக அவர் ஜெயின மதத்தின்படி பிரதிக்ஞை செய்திருந்தார். இந்தியாவுக்குத் திரும்பினதும், அவரது துறவறம் அதிகரித்தது. அவர் ஆத்தும சிந்தனைக்கும் பணத்துக்கும் பொருத்தமில்லையென்று கண்டு, தமக்கு சொந்த ஜீவனத்துக்கு வேண்டியதாக சொற்பம் மட்டும் வைத்

நூக்கொண்டு, தமது சொத்தையெல்லாம் நூற்சாரியங்களுக்குக் கொடுத்துவிட்டார். பிறகு சில காலத்துக் செல்லாம் அவர் ஏழைமை விரதங் கொண்டு, பிச்சைக்காரராகி இன்னும் அவ்விதமே இருந்து வருகிறார். பிறகு ஹிந்து மதத்துக்கே ஆதிமூலமாய் இருக்கிறதென்று அவர் சொல்லிவரும் எதிர்க்காமை என்னும் கொள்கையைக் கைக்கொள்ளலானார். அதனால், துராக்கிரகத்தால் நியாயம் கிடைக்கச் செய்ய முயலும் ஏற்பாடு என்று வக்கீல் வேலையையும் விட்டு விட்டார். ஜில்பர்ட் முர்ரே (என்னும் ஆசிரியர்) அவரை 1914-ம் வருஷத்தில் இங்கிலண்டில் கண்டபோது "காந்தி வெறும் அரிசிச் சோறும், வெறும் ஜலமும் உட்கொண்டு, மரத்தரையில் மேல் விரிப்பில்லாத பலகையில் படுத்து உறங்கி வந்தார்" என்றும் அவரது சம்பாஷணை நன்கு படித்து நாகரீகம் பெற்றவர் பேசுவதாக இருந்ததென்றும் ஒரு மகான் போலவும் காணப்பட்டார் என்றும் தெரிவித்திருக்கிறார். காந்தி உண்மையில் ஒரு மகானாகிவிட்டார். தேகத்தைப் பற்றிய ஆசைகள் எதுவும், தமது ஊழியங்களில் தாம் கவனம் செலுத்துவதற்குத் தடையாக, ஒரு சிறிதும் இருக்கக்கூடாதென்று தீர்மானித்து, சுகத்துக்கு ஹேதுவான எல்லாவற்றையும் தமது வாழ்க்கை முறையிலிருந்து தள்ளிவிட்டார். அவர் பாலியம் முதற்கொண்டே ஒரு தனி புருஷனாய் மானிட ஜாதியாருக்கு ஊழியம் செய்வதில் தமது ஆவியையும் உடலையும் அர்ப்பணம் செய்தவராக இருந்து வருகிறார்.

அவரது பொது ஜன வேலையை இரண்டு பாகமாகப் பிரிக்கலாம். முதலாவது 1893-ம் வருஷம் முதல் 1913-வருஷம் வரையிலாகும். அக்காலமெல்லாம் அவர்

தென்னாப்பிரிக்காவுக்கு உழைத்து வந்தார். இரண்டாவது இந்தியாவுக்குச் சம்பந்தப்பட்டது. 1913-ம் வருஷம் முதல் நாளது வரை யிருந்து வருகிறது.

## தென்னாப்பிரிக்காவில் போராட்டம்

சென்ற நூற்றாண்டில் தொண்ணூறும் வருஷ வாக்கில், தென்னாப்பிரிக்காவில், முக்கியமாக நேட்டாலில், சுமார் ஒன்றரை லக்ஷம் இந்தியர்கள் இருந்தார்கள். கறுப்பு மனிதர்கள் அதிகரித்தால் தேசத்துக்குக் கெடுதல் என்று தென்னாப்பிரிக்கா வாசிகள் ஆரவாரம் செய்தார்கள். கறுப்பு மனிதர்களுடைய உபத்திரவத்தைப் போக்க தென்னாப்பிரிக்கா கவர்மெண்டார், முதலாவதாக, இந்தியாவிலிருந்து இனி அதிகப்படியாக எவரும் வராதபடி தடுக்கவும், இரண்டாவதாக, ஏற்கனவே யுள்ள இந்தியர்களை அப்புறப்படுத்தவும் தீர்மானித்தார்கள். இந்த இரண்டாவது முறையை அவர்கள் செய்வது சட்டப்படி முடியாதென்று தெரியவந்தது. அப்படிச் செய்வது ஒரு உடன்படிக்கைக்கு விரோத மாகும். நேட்டால் தேசம் அதை ஆக்ஷேபித்தது. ஏனெனில் அங்கே தொழில்கள் நடப்பதற்கு சம்பளம் குறைவான கூலியாட்கள் அவசியம் வேண்டியிருந்தது. மேலும் இந்தியா கவர்ன்மெண்டாரும் அதை ஆக்ஷேபித்தார்கள்.

முதல் வழிக்காக எளிதில் ஒரு சட்டம் செய்து இந்தியர்கள் இனி வராதபடி தடுத்து விடலாம். அவ்விதம் சட்டம் செய்யவும், உடனே ஒரு கடும் போர் ஆரம்பித்து வெகு காலம் நடக்கலாயிற்று. தென்னாப்பிரிக்காவி லுள்ள வெள்ளைக்காரர்கள் தமது விருப்பம் நிறைவேறாமல் போகவே இப்படிப்பட்ட நிலைமையில்

இதர இடங்களில் எல்லா வெள்ளைக்காரர்களும் செய்துள்ளது போலவே செய்ய ஆரம்பித்தார்கள். அதாவது தங்களுக்குத் தாழ்ந்தவர்கள் என்று தாங்கள் கருதும் கறுப்பு மனிதர்களை ஹிம்ஸித்து அவமானப்படுத்தலானார்கள். எல்லா இந்தியர்களுக்கும், அதிலும் முக்கியமாக கூலி வகுப்பாரினும் உயர்ந்த இந்தியர்களுக்கு, தென்னாப்பிரிக்காவில் இருப்பதே கஷ்டமாயிருக்கும்படி செய்ய, பகையும்கொடுமையும்கொண்டு என்னென்ன கெடுதல்கள் செய்யலாமோ அத்தனையும் செய்து வந்தார்கள். இந்தியர்களுக்காக வென்று தனி வரி போட்டார்கள். மானஹீனமாக ரிஜிஸ்டர் செய்யும்படி சட்டாயப் படுத்தினார்கள். குற்றவாளிகள் போல விரலடையாளம் எடுத்தார்கள். பஹிரங்கமாக அவர்களை அவமானப்படுத்தி வித்தியாசமாக நடத்திவந்தார்கள். சட்டப்படி இந்தியர்களைக் கஷ்டப் படுத்துவது சாத்தியப்படாவிட்டால், நாம் இங்கே வெகு பெருமையாய் செய்வதுபோல, அங்கேயும் தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரர்கள் தேசபக்தியுள்ள ஜனக்கூட்டங்களை ஏவிவிட்டு இந்தியர்களின் சொத்தைச் சூறையிடவும், வீடுகளைக் கொளுத்தவும் இந்தியர்களைப் பல வகையில் ஹிம்ஸிக்கவும் ஆரம்பித்தார்கள். நிர்ப்பாக்கியர்களான இந்தியர்களைக் கஷ்டத்துக்குள்ளாக்கி, நிர்க்கதியாய் திகிலடைந்து தேசத்தை விட்டுப் போகும்படிக்கு என்னென்ன செய்பலாமோ அவையெல்லாவற்றையும் ஒன்று விடாமல் செய்யலானார்கள்.

1893-ம் வருஷத்தில் தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள் காந்தியை அங்குவந்து உதவி செய்யும்படி கேட்டார்கள். காந்தி உடனே உதவிக்குப் போகப் புறப்பட்டார். தமது தேச வாசிகள் எந்த இடத்தில் கஷ்

டப்பட்டுக்கொண்டிருந்தாலும், தாமும் அவர்களுடன் சேர்ந்து கஷ்டப்படவேண்டியது தமது 'கடமை யென்றும் தமது ஸ்வதந்திரமென்றும் எண்ணினர். 1893-ம் வருஷத்தில் அவர் நேட்டாலுக்குப் போனார். அது முதல் நடுவில் ஒரு சமயம் சிறிது காலம் தவிர 1913-ம் வருஷம் வரையில் அங்கேயே இருந்துவந்தார். அந்தச் சமயம் அவர் ஒரு வக்கீலாக இருந்தகால், ஆசியாவாசிகளை விலக்குவதற்கான சட்டத்தை நீக்க போராட ஆரம்பித்தார். அதிகக் கடுமையாக பகைமை பாராட்டிய எதிராளிகள் இருந்தும், அவர் தமது வேலையில் காரியசித்தியடைந்தார். அதன் பிறகு இந்தியர்களுக்கு சரிசமமான ராஜீய, சமூக உரிமைகள் உண்டென்பதை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளும்படி செய்வதற்காக ஒரு கடும்போராட்டம் ஆரம்பமாயிற்று. அதில் ஆரம்பம் முதல் அந்தியம் வரையில் சார்த்துவீக எதிர்ப்பு என்னும் ஆயுதமே உபயோகிக்கப்பட்டு வந்தது. நீடித்து வெகுகாலம் நடந்த இந்தப் போராட்டத்தில் ஒருசமயமாவது துராக்கிரகமாவது, பதிலுக்குப் பதில் செய்ய வேண்டுமென்பதாவது, பழிக்குபழி வாங்கவேண்டு மென்பதாவது நேர்ந்ததில்லை. ஜனங்களின் தலைவராகவும், அவர்களுக்கு ஆலோசனை சொல்லுபவராகவும் இருந்துகொண்டு, காந்தி டர்பன் நகரத்துக்கு வெளியில் திறந்தவெளியில் ஒரு குடியேற்றத்தை ஏற்படுத்தினர். அங்கே இந்தியர்களைக் கூட்டி ஜீவனத்துக்கு நிலத்தில் பாடுபடச் செய்து, அவர்களை ஏழ்மை விரதம் எடுத்துக்கொள்ளச் செய்தார். அங்கே இந்த எதிர்ப்பு முறையைக் கைக்கொண்டவர்கள், ஆயிரக்கணக்கான பேர்கள், இடைவிடாத திண்டாட்டத்தையும், அடிக்கடி அவமானத்தை

யும் அடைந்துகொண்டே கவர்ன்மெண்டை எதிர்த்துப் போராடி வந்தார்கள். இந்தப்போராட்டத்தின் சாராம் சத்தைக் கவனித்தால், இது உண்மையில் ஒரு வேலை நிறுத்தமே. அதாவது நகரங்களிலும் கிராமங்களிலும் இந்திய வேலையாட்களை வேலைக்குப்போகாதபடி நிறுத்து வதும், அதனால் குடியரசின் தொழில் ஏற்பாடும், ஜனச மூக ஏற்பாடும் சரிவர நடைபெறாதபடி தடைசெய்வது மே. ஆனால் இந்த வேலை நிறுத்தம் இதற்குமுன் சரித்தி ரத்தில்வந்துள்ள மற்றவேலை நிறுத்தங்களைப் போலின்றி, ஒருவகையில் வித்தியாசப்பட்டது. உலகமெங்கும் இவ் விதத்தொழில் நிறுத்தங்களில் எதிர்ப்போர் தங்களு டைய எதிராளிக்கு ஏற்படக்கூடிய அசந்தர்ப்பங்களில் தாமதிக்காமல் தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்ற சமயம் பார்த்து அமுக்க முயலுவார்கள். ஆனால், காந் தியோ அட்டபடிப்பட்ட முறையை ஒன்றும் கைக்கொள்ள வில்லை. இந்தப்போராட்டம் நடந்து வருகையில் திடீ ரென்று கஷ்டங்கள் நேர்ந்து கவர்ன்மெண்டார் கஷ் டப்படும் போதெல்லாம், காந்தி தமது போராட்டத்தை தயை தாக்ஷணியமின்றிக் கடுமையாக நடத்திக் காரிய சித்தி பெறாமல், அதைத் திடீரென்று நிறுத்தி தமது எதி ராளிக்கு உதவி செய்ய வருவார். உதாரணமாக, 1899-ம் வருஷத்தில் போயர் யுத்தம் ஆரம்பித்தது. உடனே காந்தி தமது போராட்டத்தை நிறுத்தி, ஒரு இந்தியன் ரெட் கிராஸ் படையைக் கூட்டினார். அந்தப் படையுத் தம் முழுவதும் உழைத்தது. இரண்டு தடவை யுத்த ரிபோர்ட்டுகளில் சிலாகித்துக் கூறப்பட்டது. சண்டை வலுவாக நடந்த விடத்தில் தைரியமாக வேலை செய்ததற் காக பஹிரங்கமாக வந்தனமளிக்கப்பட்டது. 1904-ம் வரு

ஷத்தில், ஜோஹன்னஸ்பர்க்கில் பிளேக் உண்டாயிற்று. உடனே காந்தி தமது போராட்டத்தை நிறுத்தி விட்டார். ஊரில் ஒரு ஆஸ்பத்திரியை ஏற்படுத்தினார். 1906-ம் வருஷத்தில் நேட்டாலில் ஸ்வதேசிகள் கலகம் செய்தனர். அப்பொழுதும் போராட்டம் நிறுத்தப்பட்டது. காந்தி காயம்பட்டவர்களைத் தூக்கிச் செல்லும் படை ஒன்றை கூட்டித் தாமே அதை நடத்திவரலானார். அதன் வேலை ஆபத்துள்ளதாகவும் சிரமமானதாகவும் இருந்தது. அந்தச்சமயம் நேட்டால்கவர்னரே அவரை எல்லாருமறியக் கொண்டாடிப்பேசினார். பிறகு சொற்பகாலத்துக் கெல்லாம், எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பித்ததும் ஜோஹன்னஸ்பர்க்கில் ஒரு சாதாரண ஜெயிலில் அடைக்கப்பட்டார். விட்டு விட்டு எதிர்ப்பதும் மன்னிப்பதுமாக இத்தனை காலம் நடந்த போராட்டத்தில் காந்திக்கு நேர்ந்த அவமானங்களும் தீங்குகளும் சொல்லி முடியா. எண்ணிறந்த தடவை அவர் சிறையிலடைக்கப் பட்டார். சிறையில் தனியாகவும் வைக்கப்பட்டார். தமது அறையில் இரும்புக் கம்பிகளுடன், காலும் கையும் சேர்த்துக் கட்டப்பட்டார். கோபங்கொண்ட ஜனக்கூட்டங்கள் அடிக்கடி அவரைத் தாக்கினார்கள். பிரக்ஞையற்றுப் போகும்படி அடித்து இறந்துபோனதாக எண்ணி சாலையோரத்தில் போட்டுவிட்டுப்போனார்கள். இவ்வித் ஆபத்துகளுக்குள்ளாகாத சமயங்களில் அவர் பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்டார். தூஷிக்கப்பட்டார். ஆனால் எதுவும் அவரது தைரியத்தை அசைக்கவில்லை. பொறுமையைக் குறைக்கவில்லை. எதிரிகளிடம் கொண்டுள்ள அன்பைக் கெடுக்கவில்லை. மன்னிக்கும் குணத்தை மாற்றவில்லை.

கடைசியில், இருபதுவருஷகாலம் கஷ்டமும் சோதனையும் அனுபவித்த பிறகு, ஜயமடைந்தார். 1913-ம் வருஷத்தில் லார்ட் ஹார்டிஞ்ஜ் இப்போராட்டத்துக்கு உதவியாக வந்தார். ஒரு விசாரணைக் கமிஷன் ஏற்பட்டது. வழக்கிலிருந்த பிரசினைகளில் அநேகமாக எல்லாவற்றையும் காந்தியின் பக்கமாக அது தீர்ப்புக்கொடுத்தது. அந்தத் தீர்ப்பை ஸ்திரப்படுத்த ஒரு சட்டமும் செய்யப்பட்டது.

ஒரு பிழையும் செய்யாமல், ஒரு அக்கிரமமான செயலும் செய்யாமல், எதிரி கொடுக்கக் கூடிய எவ்விதத் தண்டனையையும், எவ்வித ஆக்ஷேபமும் காட்டாமல் அவ்விதம் தண்டித்துக்கொண்டேவந்து எதிரி சலித்துத் தண்டிப்பதை வெட்கமாக எண்ணும் வரையில், பொறுத்துக்கொண்டு வந்ததாலேயே ஒருபோராட்டத்தில் ஜயமேற்பட்டதென்பதற்கு இதைவிட வியக்கத்தக்க உதாரணம் வேறொன்றையும் நான் கேட்டதில்லை.

## இந்தியாவில் ஊழியம்.

காந்தியின் ஜீவியத்தில் இரண்டாம் பிரிவு 1913-ம் வருஷத்தில் ஆரம்பமாயிற்று. இந்தக் காலம் முழுமையும் அவர் இந்தியாவில் இராஜாங்கச் சீர்திருத்த முயற்சியில் சம்பந்தப்பட்டவராக இருக்கிறார். இம்முயற்சி காந்தி தென்னாப்பிரிக்காவில் இருக்கையிலேயே மெதுவாக விருத்தி யடைந்துவந்தது. அவர் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்ததும் இம்முயற்சிக்குத் தலைமையை ஏற்றுக் கொள்ளலானார். ஆனால் 1914-ம் வருஷத்தில் ஜெர்மனியுடன் யுத்தம் நேர்ந்ததும், காந்தி பிரிட்டிஷ் ஆட்சியுடன் செய்துவந்த போராட்டத்தை நிறுத்திவைத்தார். அந்த சந்தர்ப்பத்தில் இங்கிலண்டைத்

தாக்குவது, அதை பின்புறமிருந்து அடிப்பதாகு மென்பது அவர் கொள்கை. ஒரு ஆளை இவ்விதமடிப்பது எவ்வளவு பயங்காளித்தனமோ அவ்வளவு பயங்காளித்தனம் ஒரு தேசத்தைத் தாக்குவதும். ஆகவே யுத்தம் முழுவதும் அவர் தமது மதக் கொள்கைக்கு மாறுபாடில்லாமல் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு தூரம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு உற்சாகத்துடன் உதவி செய்யலானார்.

## ஒத்துழையாமை

யுத்தம் முடிந்ததும், அந்த யுத்த காலத்தில் இங்கிலீஷ் கொடுங்கோலால் ஏற்பட்ட அவமானங்களால் அதிகம் தூண்டப்பட்டு, மறுபடியும் தமது போராட்டத்தை ஆரம்பிக்கலானார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடிப்படையை தற்போது ஆட்டி அசைத்துவரும் ஒத்துழையாமை ஏற்பாட்டை பெரிய அளவில் ஆரம்பிக்கலானார். காந்தியின் தலைமையில் நடந்து வருவது ஒரு ராஜாங்கப் புரட்சியாகும். ஆனால், இதுகாறும் நாம் தேச சரித்திரங்களில் கேட்டிராத புரட்சியாகும். அது நான்கு முக்கிய லக்ஷணங்களுள்ளது.

முதலாவது அது இந்தியாவில் இங்கிலீஷ் ஆட்சிக்கு நேர் விரோதமாக ஏற்பட்டு நடந்து வருகிறது. அன்னிய ஆட்சியில் ஸகஜமாயுள்ள அநீதியி லிருந்தும் அக்கிரமத்தி லிருந்தும் தமது ஜனங்களை விடுவிக்கக் கொண்டிருக்கும் தமது தீர்மானத்தை காந்தி மறைப்பதே கிடையாது. "கவர்ன்மெண்டார் அநியாயமாக நடந்து வருகிறவரையில் என்னை அவர்கள் தங்கள் விரோதியாக, தீர்க்க விரோதியாக எண்ணிக்கொள்ளலாம்"

என்று காந்தி சொல்லுகிறார். இன்னும் அவர் தெரிவிப்ப தாவது: "இஷ்டமில்லாதவர்களிடமிருந்து நியாயத்தை கட்டாயத்தின்மேல் அடையும் வரையில், கவர்ன்மெண் டின் நடவடிக்கையை ஒன்றும்செய்ய முடியாதபடி தடுக்க எண்ணியிருக்கிறேன். அதன் வாழ்வே ஆபத்துக் கிடமாகும்படி செய்யும் நோக்கத்துடன் கவர்ன்மெண்டை நான் எதிர்க்கிறேன்." இப்படியவர் சொல்லுவது ராஜத் துரோகமென்பது மற்றவர்களுக்குத் தெரிந்திருப்பது போலவே காந்திக்கும் தெரியும். இந்தியன் பினல் கோடில் உள்ள ராஜத்துரோக ஸெக்ஷனின் கீழ் அவரைக் குற்றம் சாட்டினால், தாம் குற்றவாளியல்ல வென்று சொல்லிக்கொள்ள முடியாதென்று காந்தி தெரிவிக்கிறார். "ஏனென்றால் நம்பிக்கை, மரியாதை, ஆதரவு ஆகிய இவைகளுக்குப் பாத்திரமல்லாமல் செய்துகொண்ட ஒரு கவர்ன்மெண்டுக்கு உதவி செய் வதோ, அதனுடன் ஒத்துழைப்பதோ மானக்குறைவு என்று ஜனங்கள் எண்ண வேண்டுமென்பதற்காகவும் அதற்கர்க ராஜாபிமானக்குறைவு ஏற்படவேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டும், நான் பிரசங்கம் செய்துவரு கிறேன்." என்று காந்தி சொல்லுகிறார்.

இங்கிலீஷ் ஆட்சியை அவர் இவ்வளவு கடுமையாக எதிர்த்துவந்தாலும், இங்கிலீஷ் ஜனங்களிடம் பகை ஒரு சிறிதும் கிடையாது. ஜெர்மனியோடு நடந்த யுத்தத்தில் நம்மில் பலர் ஒரு தேசத்து ஜனங்களை அதன் அரசாட்சி யோடு சேர்த்து எண்ணினது போன்ற தோஷம் காந்தி யிடம் எப்போதும் கிடையாது. "பிரிட்டிஷ் ஜனங்களை நான் விசுவாசிக்கிறதாயும் அவர்களுடைய ஸகவாஸம் எனக்கு வேண்டுமென்றும் அவர்களுக்குச் சொல்லியிருக்

கிறேன்," என்கிறார் காந்தி. ஆனால் இந்த ஸகவாஸம் இந்தியாவின் தன்மதிப்புக்கும் சம்பூரணமான சமத்துவத்துக்கும் விரோதமில்லாததாக இருக்கவேண்டும்.

இரண்டாவது லக்ஷணம், இந்த அரசாங்கப் புரட்சியில் எவ்வித துராக்கிரகமும் கொஞ்சங்கூடக் கிடையாது. இந்தப் புரட்சியின் முக்கிய நீதி துராக்கிரகமின்மையாகும். ஏனென்றால் காந்தி எதிர்க்காமை விரதங்கொண்டவர். தென்னாப்பிரிக்காவில் போலவே இந்தியாவிலும் சமாதான முறைகளால் மட்டும் காரிய சித்தி பெறுவதாகவும், வேறு முறைகளால் என்றால், காரிய சித்தியே கிடையாதென்றும் சொல்பவர். துராக்கிரகமுறை ஐரோப்பாவில் உபயோகப்படலாமென்றாலும், இந்தியாவில் நமக்கு அது ஒருபோதும் பயன்படாது. சுத்தமான ஆயுதங்களால் சிறப்பு வாய்ந்த முறையில் நமது போராட்டங்களை நடத்தவேண்டும். உதாரணமாக "நாம் தெய்வீகத் தன்மையின்மையை தெய்வீகத் தன்மையால் எதிர்க்க வேண்டும், அவர்களுடைய சூதையும் கபடத்தையும் மறைவின்மையாலும் கபடமின்மையாலும் எதிர்க்கவேண்டும். அவர்களுடைய பயங்கரமும் கிகிலு முள்ள செய்கைகளை தைரியத்தாலும் பொறுமையுடன் சகிப்பதாலும் எதிர்க்க வேண்டும்." மேலும், "நமது கக்ஷியில் சேராதவர்களிடம் நாம் எவ்விதமும் துராக்கிரகமாக நடக்கக் கூடாது." மேலும் காந்தி, தமது தேசத்து ஜனங்களின் உயிர் எவ்வளவு அருமையாக பாவிக்கப்பட வேண்டுமோ அவ்வளவு அருமையாக ஒவ்வொரு இங்கிலீஷ்காரருடைய உயிரையும், கவர்ன்மெண்டாரிடம் வேலைபார்க்கும் ஒவ்வொரு உத்யோகஸ்தருடைய உயிரையும் அருமையாக பாவித்துக் காப்பாற்ற வேண்டுமென்று

கட்டளையிட்டிருக்கிறார். இந்தியா சக்தியைப் பிரயோகிக்கும் கொள்கையைக் கைக்கொண்டால், உடனே இந்தியனுக் இருந்து நான் செய்யக்கூடிய வேலை ஒழிந்து விடுகிறது...இந்தியாவைநான் ஒரு செல்வமாக எண்ணி வருவதும் போய்விடும்.

இவ்விதம் காந்தி துராக்ரக மின்மையை போதிப்பதில், இந்தியர்கள் பலஹீனர்களாயிருப்பதைக்கொண்டு இவ்விதம் செய்யவில்லை யென்பதை வற்புறுத்தி வருகிறார். இந்தியா அதிக பலசாலியாகவும், ஏற்படக்கூடிய கஷ்டங்களை சகிக்கக் கூடியதாகவும் இருப்பதால்தான் துராக்கிரகமின்மை வேண்டுமென்கிறார். " துராக்கிரக மின்மை பலஹீனர்களுடைய ஆயுதமல்ல, பலசாலிகளுடைய ஆயுதமென்றே நான் நம்பிவருகிறேன்........... இந்தியா பலமும் சக்தியுமுள்ளதால் தான் அது துராக்கிரக மின்மையை அப்பியஸிக்கவேண்டு மென்கிறேன். இந்தியாவுக்கு ஆயுதங்கள் எதுவும் வேண்டாம். நாம் ஒரு மாமிசப் பிண்டமென்று கருதுவதால்தான் நாம் ஆயுதங்கள் வேண்டுமென்கிறோம். இந்தியா தனக்கு அழியக் கூடாத ஆத்மா உள்ளதென்றும், உலகமுழுவதும்சேர்ந்து காட்டக்கூடிய தேகசக்தியை எதிர்த்து ஜயமடைந்து உயரக்கூடுமென்றும் அது அறிந்து கொள்ளவேண்டும்.

ஆனால் முக்கிய காரணம், எதிர்க்காமை தர்மமார்க்கமென்று அவர் அறிந்திருப்பதால்தான் அவர் அதை போதித்து, அதன்படி நடந்து வருகிறார் " பூமியிலுள்ள எவருக்கும் வேண்டியது பலத்தைக் காட்டிக் கிடைக்கும் நீதியல்ல; ஆத்மதியாகத்தால் அடையக் கூடிய நியாயமே......துராக்கிரக மின்மை உயர்ந்ததாயும் தருமமானதாகவும் இருக்கிறது. தண்டிப்பதைவிட

மன்னிப்பு அதிக பௌருஷத்தைக் காட்டுகிறது. மன்னிக்கும் குணத்தால் போர்வீரன் குணசாலியாகிறான்.'' இந்த நோக்கத்தால் தான் காந்தி தமது போராட்டத்தை ஒரு மத யுத்தமாக எண்ணி வருகிறார் என்று நான் நினைக்கிறேன்.

இந்த முறை தருமம் என்பது மாத்திரமல்ல; காரியானுகூலமான முறையென்றும் சொல்லுகிறார். நீடித்திருக்கக்கூடிய வெற்றியை யடைவதற்கு இது ஒரு நிச்சயமான வழியாகும். "வெற்றியடைவதற்கு முக்கியமான நிபந்தனை நாம் முற்றிலும் துராக்கிரகத்தை ஒழித்திருப்பதே, இந்தியா. ஜீவன்களையும் சொத்தையும் அழிக்க முயலலாம். ஆனால் அந்த முறையில் காரியஸித்தி எதுவும் ஏற்படாது......சாந்தமானதாய் தவறக்கூடாததான இந்த முறையின் இரகசியங்களை நாம் அனுபவ பூர்வமாக அறிந்து கொண்டால், நமது எதிரிகள் கத்தியை உயர்த்தும்போது நாம் ஒரு கோபச் சொல்லைச்சொல்லவாவது கோபத்தால் சிறுவிரலைக்கூட உயர்த்தவாவது அவசியமிராது என்பதை அறிந்து கொள்ளலாம்.

ஆனால் துராக்கிரகமின்மை மாத்திரம் போதாது. எதிர்க்காமை யென்பது பொறுமையுடன், நேரும் கஷ்டங்களையெல்லாம் அனுபவிப்பது என்பது மாத்திரமல்ல. அது முன் நின்று தனது யோக்கியதையைக் காட்டக்கூடியதாக இருக்கவேண்டும். இந்த லக்ஷணம் காந்தியின் ஒத்துழையாமையில் அமைந்து உள்ளது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு இன்றியமையாததாக உள்ள ராஜீய, ஸமூக வேலைகளுள் எதிலும் ஒத்துழைக்காமல் இருக்கவேண்டும் என்று காந்தி தம்மைப் பின்பற்றியிருப்போருக்கு போதித்துவருகிறார்.

கடைசியாக, காந்தி இந்திய எண்ணங்களுக்கும் இந்திய பழக்க வழக்கங்களுக்கும் இந்திய லக்ஷியங்களுக்கும் ஒத்ததாக இந்தியாவுக்கு ஸன்மார்க்க உத்தாரணமும் ஆத்ம உத்தாரணமும் ஏற்படவேண்டுமென்று விரும்பிவருகிறார். இதனால், கூடியபட்டும் மேற்றிசை நாகரிகத்தின் பழக்கம்--அதாவது அதன் தொழில் அடிமை ஏற்பாடு தனமே பெரிதாக எண்ணும் தன்மை, யுத்தம்,ஜஹிகப்பற்று ஆகிய இவைகள் ஒன்றுமே இந்தியாவுக்கு வரக்கூடாதென்று ஏற்படுகிறது. இந்த நோக்கம் நிறைவேற முதலில் ஆகவேண்டியது இந்தியர்களில் ஒருவரிலிருந்து ஒருவரைபிரித்துவைக்கும் தடைகளைப்போக்கி எல்லாரும் ஓரேசகோதரர்களாக ஆகும்படி செய்வதே. உதாரணமாக அவர் ஜாதி வித்தியாசங்களையும், மதவேறுபாடுகளையும் ஒழித்துவிட முயலுகிறார். மகம்மதியர்களும் இந்தியர்களும் பரஸ்பர ஒற்றுமையுடன் வாழவேண்டும்.

இப்படிப்பட்டவர் மகாத்மா காந்தி. இந்த உயர்ந்த எண்ணத்துடன்தான் அவர் தமது ஜனங்களுடன் கலந்து வருகிறார். அவர் இந்தியர்கள் நினைத்திருக்கிறபடி பரிபூரணராயும் ஸர்வ ஜன பூஷிதராயும் இருப்பதாகச் சொல்லலாம். அவர் ஸாமான்யமாயும் மாசற்றதாயுமுள்ள குணமுள்ளவர். காந்தியைப்பற்றி நினைக்கும்போது அவர் யேசுகிறிஸ்து போலிருப்பதாக எனக்குத்தோன்றுகிறது. யேசுபோலவே அவரும் இருந்து வருகிறார். யேசு சொன்னதையே அவரும் சொல்லுகிறார். யேசுவைப் போலவே, பூமியில் தான் நிலை நிறுத்தவிரும்பும் தருமத்துக்காகக் கஷ்டப்பட்டு முயன்றுவருகிறார். ஒரு நாள் மேன்மையுடன் அதற்காக தமது ஜீவனைத்தியாகமும் செய்வார்.

# குறிப்புகள்.

---

ஹோம்ஸ்.—இவரது பூர்ண நாமம் ஜான் ஹேய்ன்ஸ் ஹோம்ஸ். அமெரிக்காவில் நியூ யார்க்கில் கம்யூனிடி சர்ச் என்னும் மதஸ்தாபனத்தில் குருவாக இருந்துவருகிறார். உண்மையை அறியப் பாடுபடுபவர். அவர் காந்தியைப்பற்றி உயர்ந்த அபிப்பிராயங் கொண்டிருக்கிறார். முதலில் அவரை யறிய நேர்ந்ததும், அவரைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். காந்தி சிறையிலடைக்கப்பட்டதும் இன்னொரு பிரசங்கம் செய்து, அதில் காந்தியின் உயர்வை எடுத்துக் காட்டியுள்ளார்.

வில்ஸன் (வுட்ரோ)—அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ப்ரெஸிடெண்டாக இருந்தவர். யுத்தத்தில் ஸப்மரீன் சண்டையின் கொடுமைகளைப் போக்கப் பாடுபட்டார். யுத்தமுடிவில் சரியான ஸமாதானம் ஏற்படும்படிக்ளும், சிறு தேசங்களுக்கு ஸ்வயாதீனம் ஏற்படும்படிக்கும் முயற்சி யெடுத்து வந்தார். அந்த சமயம் அவர் கியாதி அதிகம் பரவலாயிற்று.

லெனின் (நிகோலேய்) ரஷ்யாவில் ஸாதாரண ஜனங்களின் நிலைமையை உயர்த்தப் பாடுபட்டு வருபவர். ரஷ்யக் குடியரசை நிலைநிறுத்தி அதனால் தேசம் முழுவதும் க்ஷேமம் உண்டாக்க எண்ணங் கொண்டிருப்பவர்.

டெல் (வில்லியம்)—ஸ்விட்ஸர்லண்டில் 13-ம் நூற்றாண்டின் கடைசியில் பிறந்தவர். ஒரு பெரிய தேசாபிமானி. ஸ்விட்ஸர்லண்டை ஸ்வாதீனப்படுத்தியிருந்த ஆஸ்டிரியர்களுக்கு விரோதமாகக் கிளம்பி தமது தேசம் ஸ்வயாதீனம் அடைய மிகப் பாடுபட்டார்.

வால்லேஸ் (வில்லியம்)—இவர் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பாகத்தில் ஸ்காட்லண்டிலிருந்த ஒரு தேசாபிமானி. இங்கிலீஷ் அரசர் எட்வர்ட் I—க்கு விரோதமாகக் கிளம்பி தமது நாட்டுக்கு ஸ்வயாதீனம் கிடைக்கப் பாடுபட்டார். 1304 வர்ஷம் தோற்கடிக்கப்பட்டு, பிடிபட்டு, ராஜத்துரோகத்துக்காக தூக்கிடப் பட்டார்.

பிரான்கன்ஸ்டீன்—மிஸஸ் ஷெல்லி என்னும் ஆங்கில கதையாசிரியர் இப்பெயர் கொண்ட நாவலொன்று எழுதியிருக்

கிருர். அதில் கதாநாயகன் இயற்கை சக்திகளைச் சேர்த்து ஒரு அற்புதமான, உயிருள்ள ஜந்துவை சிருஷ்டித்தான். ஆனல் அது சீக்கிரம் ஒரு பெரிய ராக்ஷஸ வடிவம் கொண்டு தன்னைச் சிருஷ்டித்தவனையே அழிக்க முயன்றது

வில்லியம் லாயிட் காரிஸன்—(1805-1869). ஒரு அமெரிக்கர்; அடிமை வியாபாரத்தை ஒழிக்கப் பாடுபட்டவர்.

எம்மட் (ராபர்ட்)—பதினெட்டாம் நூற்றுண்டில் ஐயர்லண்டிலிருந்த ஒரு தேசபக்தர். 1803-ம் வருஷத்தில் சுயாதீனம் ஏற்படுத்துவதற்காக சண்டை யாரம்பித்தார். ஆனல் தோற்றுப்போய், ராஜத்துரோகத்துக்காக தூக்கிலிடப்பட்டார்.

காஸ்ஸியஸ்கோ(தார்டியஸ்)—(1756-1817)ரஷ்யாவுக்கு விரோதமாகக் கிளம்பிய ஒரு போலண்ட் வீரர். போலீஷ் ஸைன்யங்களை ரஷ்யாவோடு யுத்தம் செய்ய நடத்திக் கியாதி பெற்றவர். ஒரு பெரிய தேசபக்தர்.

வாஷிங்டன் (ஜார்ஜ்)—1732-1799. அமெரிக்கஐக்ய நாடுகளை இங்கிலீஷ் ஆட்சியிலிருந்து விடுவித்தவர். அமெரிக்ககுடியாசை ஸ்தாபித்தவர். ஜனங்களால் போற்றப்பட்டு வரும் ஒரு பெரிய தேசாபிமானி.

காரிபால்டி (1807-1882) ஒரு பிரவிித்திபெற்ற இட்டாலிய தளகர்த்தர். பெரிய தேசாபிமானி. இட்டலியை ஆஸ்டிரியாவின் ஆதீனத்திலிருந்து விடுவித்தவர்களுள் ஒருவர்.

டால்ஸ்டாய் (கௌண்ட் லியோ):—1828—1911; இலக்கிய உலகில் பிரவிித்திபெற்றவர்களுள் ஒருவர். ரஷ்யாவில் பிறந்தவர். ஜனங்களுடைய கஷ்ட நஷ்டங்களைக் கண்டு, அவர்களுக்கு பரிந்து புஸ்தகங்களும் வியாஸங்களும் எழுத ஆரம்பித்தார். ஜனங்களுக்கு ஸ்வயாதீனம் கொடுக்க விரும்பி அதற்காக முயன்ருர். பிற்காலத்தில் அவர் அதிக மதப்பற்றுடையவராக இருந்து வந்தார்.

பர்க் (எட்மண்ட்):—(1729—1797) இங்கிலண்டைச் சேர்ந்தவர்.பார்லிமெண்டில் மெம்பராயிருந்தார்.வாதத்தில் வல்லவர். பிரஸங்கம் செய்வதில் தேர்ந்தவர்.

ஹென்ரி (பாட்ரிக்) 1736-1809 அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வெர்ஜினியா நாட்டில் பிறந்தவர். அமெரிக்க ஸ்வயாதீனத்துக்காகப்பாடுபட்டவர். பிரஸங்கம் செவ்வதில் தேர்ந்தவர்.

ஸேண்ட் பிரான்ஸிஸ் (1182-1226) இவர் ஒரு தனி ஸன்னியாஸ வகுப்பை ஏற்படுத்தினவர் கிறிஸ்தவ மதத்தில் ரோமன் காத்தோலிக் பிரிவைச் சேர்ந்தவர்.

# V. NARAYANAN & CO.

BOOK-SELLERS

4, KONDI CHETTY STREET, MADRAS

ஓம் :

## நவீன தமிழ் நாவல்கள்

அடியிற்கண்ட புத்தகங்களில், புத்தி புகட்டும் புதிய நாவல்கள், இன்பம் பெருக்கும் துப்பறியும் நாவல்கள், நன்னெறிபோதிக்கும் நற்றமிழ் நாடகங்கள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு புத்தகமும், அழகிய தமிழ்நடையில் எழுதப்பட்டு கண்ணைக்கவருமாறு உயர்ந்த காகிதத்தில் நேர்த்தியாக அச்சடிக்கப்பட்டிருக்கிறது. ஆரிய சகோதர சகோதரிகள் வாங்கிப் படித்துக் களிப்புறுவார்களாக.

அ. சங்கரலிங்கம்பிள்ளை B. A. இயற்றியது.

| | | | | |
|---|---|---|---|---|
| கன்னியின்முத்தம் | 4 பாகம் | ரூ. | 5 | 0 |

பண்டித நடேச சாஸ்திரியார் இயற்றியவை

| | | | | |
|---|---|---|---|---|
| திக்கற்ற இருகுழந்தைகள் | | ... | 1 | 8 |
| தலையணை மந்திரோபதேசம் | | ... | 1 | 0 |
| தானவன் | துப்பறியும் நாவல் | ... | 0 | 12 |
| விருச்சகடி | | ... | 0 | 4 |

ஆரணி குப்புஸாமி முதலியார் இயற்றியவை

| | | | |
|---|---|---|---|
| மாண்டிகிரிஸ்டோ | ... | 3 | 0 |
| கற்கோட்டை | ... | 2 | 0 |
| சுகுண தீரன் | ... | 2 | 4 |

4, கோண்டிசெட்டித் தெரு, ஜி. டி. மதராஸ்

# வி. நாராயணன் அண்டு கம்பேனி

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| வரதசுந்தரம் | துப்பறியும் நாவல் | ... | 2 | 0 |
| அம்புஜாக்ஷி | | ... | 2 | 0 |
| அயாஷா | | ... | 1 | 12 |
| மஞ்சள் அறையின் மர்மம் | துப்பறியும் நாவல் | | 1 | 8 |
| லண்டன் திருடர் | ,, | ... | 2 | 12 |
| குலசேகரன் | ,, | ... | 1 | 4 |
| மின்சாரமாயவன் | ,, | ... | 1 | 8 |
| சங்கநிதி | ,, | ... | 0 | 12 |
| ரங்கநாயகி | ,, | ... | 1 | 4 |
| புஷ்பவனம் | ,, | ... | 0 | 14 |
| பத்மநிதி | ,, | ... | 0 | 10 |
| வீரநாதன் | ,, | ... | 0 | 12 |
| தேவராஜு | ,, | ... | 0 | 6 |
| தாக்ஷாயணி | ,, | ... | 0 | 6 |
| இந்திராணி | ,, | ... | 1 | 4 |

நாகை ஸி. கோபாலகிருஷ்ணன் இயற்றியவை

| | | | | |
|---|---|---|---|---|
| தனபாலன் | | ... | 2 | 0 |
| சித்ரரேகை | துப்பறியும் நாவல் | ... | 1 | 8 |
| பத்மரேகை | ,, | ... | 1 | 4 |
| ஆத்மநாதன் | | ... | 0 | 12 |
| பாதாளவாசி | | ... | 0 | 6 |

வ. கே. துரைஸாமி ஐயங்கார் இயற்றியவை

| | | | | |
|---|---|---|---|---|
| மேனகா | | ... | 3 | 0 |
| திகம்பரஸ்வாமியார் | | ... | 3 | 0 |
| வஸந்தமல்லிகா | துப்பறியும் நாவல் | ... | 1 | 8 |
| பாலாமணி | ,, | ... | 2 | 0 |

**4, கோண்டிசெட்டித் தெரு, ஜி. டி. மதராஸ்**

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| வித்யாஸாகரர் | | ... | 1 | 4 |
| மாணிக்கவாசகர் | நாடகம் | ... | 0 | 8 |
| கனகாம்புஜம் | | ... | 2 | 8 |
| **ஜே. ரங்கராஜு இயற்றியவை** | | | | |
| இராஜேந்திரன் | துப்பறியும் நாவல் | ... | 1 | 0 |
| ராஜாம்பாள் | ,, | ... | 0 | 12 |
| சந்திரகாந்தா | ,, | ... | 0 | 12 |
| மோஹனஸுந்தரம் | ,, | ... | 0 | 12 |
| **நாகை. சொ. தண்டபாணிப்பிள்ளை இயற்றியவை** | | | | |
| கனகாங்கி | ,, | ... | 2 | 0 |
| ஏகம்பஞ்சநதம் | ,, | ... | 0 | 10 |
| மதிமுகி | ,, | ... | 0 | 8 |
| **எஸ். ஏ. இராமஸாமி அய்யர் இயற்றியவை** | | | | |
| நீலா | | ... | 1 | 4 |
| ஆநந்தசுந்தரி | | ... | 0 | 12 |
| பத்மநாபன் | | ... | 0 | 14 |
| சாரதாம்பாள் | | ... | 0 | 8 |
| வத்ஸலா | | ... | 0 | 8 |
| லீலாவதி | | ... | 0 | 12 |
| புருஷோத்தமன் | | ... | 0 | 10 |
| மாலிகாபூஷணி | | ... | 0 | 10 |
| சிவானந்தன் | | ... | 0 | 10 |
| ஸ்வயம்பிரகாசன் | | ... | 0 | 10 |
| இரஞ்சிதசிங் | துப்பறியும் நாவல் | ... | 0 | 10 |

## வி. நாராயணன் அண்டு கம்பெனி

| | | | |
|---|---|---|---|
| | | | ரூ. அ. |
| இராமமூர்த்தி | துப்பறியும் நாவல் | ... | 0 10 |
| நீலகண்டன் | ,, | ... | 0 10 |
| இரகுநாதன் | ,, | ... | 0 12 |

ராய்சாகிப் பொன்னுசாமிபிள்ளை இயற்றியவை

| | | | |
|---|---|---|---|
| கமலாக்ஷி | | ... | 1 12 |
| ஞானாம்பிகை | | ... | 1 8 |
| ஞானசம்பந்தன் | | ... | 1 4 |
| சிவஞானம் | | ... | 1 4 |

எம். ஏ. நெல்லையப்பர் இயற்றியவை

| | | | |
|---|---|---|---|
| வித்யாநந்தர் | | ... | 1 4 |
| இரத்னமாளிகை | துப்பறியும் நாவல் | ... | 0 12 |

எஸ். எஸ். அருணகிரிநாதன்

| | | | |
|---|---|---|---|
| வீரகேசரி | துப்பறியும் நாவல் | ... | 1 12 |
| வசீகரி | (ஞானப்ரகாசம்பிள்ளை) | ... | 1 12 |
| வசுமதி (வி. ராமன்) | துப்பறியும் நாவல் | ... | 1 8 |
| தாமரைவதனி | ஏ. ஆர். தாஸன் | ... | 1 4 |
| காதலா? கருணையா?? | சுப்பராயபிள்ளை | ... | 0 14 |

அ. ரா. மாதவவராய முதலியார்

| | | | |
|---|---|---|---|
| அங்கயற்கண்ணி | துப்பறியும் நாவல் | ... | 1 12 |
| மாணிக்கவல்லி | ,, | ... | 1 0 |

ச. தா. மூர்த்திமுதலியார்

| | | | |
|---|---|---|---|
| அதிசயபொக்கிஷம் | துப்பறியும் நாவல் | ... | 1 8 |
| நாகரத்னம் | ,, | ... | 0 12 |
| தனபாக்யம் | ,, | ... | 2 0 |

4, கோண்டிசெட்டித் தெரு, ஜி. டி. மதராஸ்

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| புஷ்பாவதி | ,, | ... | 0 | 10 |
| கண்ணம்மாள் | ,, | ... | 0 | 8 |
| மாணிக்கவல்லி | | ... | 0 | 8 |
| சிவகாமி | | ... | 0 | 10 |

*பி. எஸ். சுப்ரமண்ய அய்யர் இயற்றியவை*

| | | | | |
|---|---|---|---|---|
| ஷண்முகசுந்தரம் | | ... | 2 | 0 |
| விக்ரமஸிங்கன்கோட்டை | | ... | 1 | 0 |
| ஸ்திரீரத்னம் | | ... | 1 | 4 |

*வரகவி-திரு-அ. சுப்ரமண்யபாரதியார்*
*இயற்றியவை*

| | | | | |
|---|---|---|---|---|
| ஜடாவல்லபர் | | ... | 2 | 8 |
| ஹரிச்சந்திரன் | | ... | 0 | 10 |
| வனஜாக்ஷி | | ... | 0 | 10 |
| சரித்ரசந்திரிகை | | ... | 0 | 12 |
| மாருதிவிஜயம் | நாடகம் | ... | 0 | 12 |
| பத்மினி | | ... | 0 | 3 |

---

| | | | | |
|---|---|---|---|---|
| பொற்ருேடி | By. K. சுந்தரம்பிள்ளை | ... | 1 | 4 |
| பிரேமகாந்தன் | | ... | 0 | 12 |
| கோமளம் காஞ்சியாத்திரை | | ... | 0 | 8 |
| ஞானும்பாள் | துப்பறியும் நாவல் | ... | 0 | 12 |
| ஞானும்பாள் | By கஜாம்பாள் | ... | 0 | 12 |
| பூபாலன் ஸ்ரீபாலன் | (விஷ்ணுநேசன்) | ... | 1 | 12 |
| ஓர்பரத்தை | | ... | 1 | 4 |
| கமலரேகை | | ... | 0 | 12 |

## வி. நாராயணன் அண்டு கம்பெனி

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| மாதவனின் மாயக்கொலை | ... | 0 | 10 |
| தங்கம்மாள் | ... | 0 | 12 |
| விவேகபுரவேதியர் | ... | 1 | 0 |
| *ஸி. என். குப்புசாமி முதலியார் இயற்றியவை* | | | |
| தலைவாங்கி அபூர்வசிந்தாமணி | ... | 1 | 0 |
| தலைவெட்டி தயாபரசுந்தரி | ... | 0 | 12 |
| கமலவல்லி *துப்பறியும் நாவல்* | ... | 3 | 8 |
| ஆநந்தரங்கன் | ... | 0 | 10 |
| அஞ்சனாக்ஷி சோமசுந்தரம்பிள்ளை இயற்றியவை | | 2 | 4 |
| *ஓ. ஸம்பத் இயற்றியவை* | | | |
| கமலாஸனி | ... | 1 | 0 |
| கமலபவன அற்புதம் *துப்பறியும் நாவல்* | ... | 0 | 10 |
| பரிமளரோஜா | ... | 0 | 5 |
| ஸுகந்தமாலினி *(அ. நடேசபிள்ளை* | ... | 0 | 5 |
| ஸத்யசீலன் *இயற்றியவை)* | ... | 0 | 10 |
| மீனாக்ஷிஸுந்தரம் | ... | 0 | 12 |
| பொன்னுசாமிதேவர் கொலைக்கேஸ் | ... | 0 | 14 |
| *பி. கே. கிருஷ்ணமாசாரியர்* | | | |
| கிருஷ்ணவிஜயம் | ... | 1 | 4 |
| *தேசிய ராஜீய நூல்கள்* | | | |
| மகாத்மா காந்தி *அவரது ஜீவியசரித்ரம்* | ... | 1 | 8 |
| இந்தியஸ்வராஜ்யம் | ... | 0 | 12 |
| இந்தியாவும் சுயஆக்ஷியும் | ... | 1 | 8 |
| முகம்மதாலி ஷவுகத்ஆலி | ... | 1 | 0 |
| ஸி. ஆர். தாஸ் | ... | 0 | 12 |
| லாலாலஜபதிராய் | ... | 0 | 8 |

**4, கொண்டிசெட்டித் தெரு, ஜி. டி. மதராஸ்**

## வி. நாராயணன் அண்டு கம்பேனி

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஸ்வராஜ்யம் ... | 0 | 8 |
| ஒத்துழையாமை ஏன்? ... | 0 | 8 |
| சிறைச்சாலை அனுபவங்கள் ... | 0 | 8 |
| ஆத்மசக்தி ... | 0 | 10 |
| சர்கா அல்லது ராட்டினம் ஸர். பீ. ரே. எழுதிய புஸ்தகத்தின் மொழி பெயர்ப்பு ... | 0 | 8 |
| சிவாஜி சரித்திரம் ... | 1 | 0 |
| கல்யாணி ... | 1 | 0 |
| ஆரோக்யவழி (மகாத்மா காந்தி) ... | 0 | 12 |
| நீதிதர்மம் ... | 0 | 6 |
| *பி. சம்பந்த முதலியார் B.A., B.L., நாடகங்கள்* | | |
| லீலாவதி ஸுலோசனு ... | 0 | 12 |
| மனோஹரன் ... | 0 | 12 |
| கள்வர் தலைவன் ... | 0 | 12 |
| சத்ருஜித் ... | 0 | 12 |
| அமலாதித்யன் ... | 1 | 0 |
| காதலர்கண்கள் ... | 0 | 12 |
| இரண்டு நண்பர்கள் ... | 0 | 14 |
| விரும்பியவிதமே ... | 1 | 0 |
| ரத்னாவளி ... | 0 | 12 |
| வாணீபுரவணிகன் ... | 0 | 12 |
| மகபதி ... | 0 | 12 |
| சாரங்கதரன் ... | 0 | 8 |
| யயாதி ... | 0 | 8 |
| காலவரிஷி ... | 0 | 8 |
| பேயல்ல பெண்மணியே ... | 0 | 8 |
| மார்க்கண்டேயர் ... | 0 | 10 |

**4, கோண்டிசெட்டித் தெரு, ஜி. டி. மதராஸ்**

## வி. நாராயணன் அண்டு கம்பெனி

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| பொன் விலங்குகள் | ... | 0 | 8 |
| நற்குலதெய்வம் | ... | 0 | 8 |
| வேதாள உலகம் | ... | 0 | 8 |
| புஷ்பவல்லி | ... | 0 | 12 |
| சிம்ஹளநாதன் | ... | 0 | 12 |
| சிறுத்தொண்டர் | ... | 0 | 8 |
| மெய்க்காதல் | ... | 0 | 12 |
| ரஜபுத்ரவீரன் | ... | 0 | 8 |
| விஜயரெங்கம் | ... | 0 | 12 |
| பிரஹசனங்கள் | ... | 0 | 8 |
| புத்தர் | ... | 1 | 0 |
| ஊர்வசியின் சாபம் | ... | 0 | 8 |
| கீதமஞ்சரி | ... | 0 | 8 |
| சபாபதி | ... | 0 | 8 |

# விஷ்ணுபுராணம்

என்கிற புராண ரத்னம் முனி சிரேஷ்டர்களாலும் மகாத்மாக்களாலும் போற்றப்பெற்றது. காலிகோ பயிண்டு. ... 3 0

புதியநாவல் துப்பறியும் நாவல்

# சுந்தர்சிங்

அல்லது

## பாஸ்கர விலாஸ் படுகொலை

ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றியது.

விலை ரூபா 1—12—0

4, கொண்டிசெட்டித் தெரு, ஜி. டி. மதராஸ்.

P. R. R. & Co., Madras.